விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதின்னான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 01 புதன்கிழமை (16.12.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 362

## சரத் பொன்சேகா கருத்துக்களால் சர்வதேச ரீதியில் நெருக்கடிகள்

### ஊடக அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகா கடந்த ஞாயிற்றுக் கிழமை சண்டே லீடரில் வழங்கியுள்ள கருத்துக்களையடுத்து சர்வதேச நாடுகளிலிருந்து அரசுக்கு வரும் நெருக்கடிகள் மீண்டும் அதிகரித்துள்ளதாக ஊடகவியலாளர் மாநாட்டில் ஊடக அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்த்தன கூறியுள்ளார். கடந்த மே மாதம் இராணுவ உயர் அதிகாரிகளால் புலிகளின் அரசியல்தலை வர்கள் கொல்லப் பட்டமை குறித்து சரத் கருத்து வெளியிட்ட தால் மூடிமறைக்கப்பட்டிருந்த சிக்கல்கள் மீண்டும் வளரத் தொடங்கி விட்டன என்றார் அவர்.

இது வரை காலமும் இலங்கை மீது பல குற்றச்சாட்டுக்களைக் கூறிய உலக நாடுகளைச் சமாதானப் (14ஆம் பக்கம் பார்க்க)

## சரணடைவதற்கு மத்தியஸ்தம் வகிக்க தமிழீழ விடுதலைப் புலிகள் கோரினர்

### ஐ.நா. சபை தெரிவிப்பு



(கொழும்பு)

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது சரணடைவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தம்மிடம் கோரியதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிவித்துள்ளது.

சரணடைவது தொடர்பில் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஐக்கிய நாடுகளைத் தொடர்பு (14ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட கடுப்பணம் செலுத்தினார் சிவாஜி

## தமது கட்சிக்கு தொடர்பில்லையென தமிழ்க் கூட்டமைப்பு அறிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்நாடாளுமன்றஉறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சுயேட்சையாக போட்டியிடுவதென தீர்மானித்து தமது கட்டுப்பணமான 75 ஆயிரம் ரூபாயை நேற்று செலுத்தியுள்ளார். எனினும் இம் முடிவு அவரது தனிப்பட்ட முடிவு என கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. (14ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் பெருவெள்ளம் 80 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு

(மட்டக்களப்பு)

வங்களா விரிகுடாவில் நிலை கொண்டுள்ள தாழமுக்கத்தினால் கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்தும் பெய்துவரும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 80ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அதிகாரிகளின் தகவலின்படி ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி உறவினர், நண்பர்கள் (14ஆம் பக்கம் பார்க்க)

**உள்ளே...**

தமிழகத்தின் பிரபல சோதிடர் சிவல்புரி சிங்காரம் எழுதும் குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## வெளிமாவட்டங்களுக்குச் செல்ல புதிய பயண ஏற்பாடுகள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இருந்து பிறமாவட்டங்களுக்கு ஏ-9 தரைப்பாதை மூலம் பேருந்துகளில் பயணஞ் செய்கின்ற பொதுமக்கள் தற்போது எதிர்நோக்கி வருகின்ற கிரமங்களை நிவர்த்திக்கும் முகமாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றுக் காலை உரிய அனைத்துத் தரப்பினருடன் கலந்துரையாடி சில தீர்மானங்களை எடுத்துள்ளார்.

மேற்படி பயணிகள் எதிர்கொள்ளும் சிரமங்கள் தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டதையடுத்து நேற்று முன் தினம் அதிகாலை யாழ். புகையிரத நிலையக் கட்டிடப் பகுதிக்குச் (14ஆம் பக்கம் பார்க்க)

## மினிவான் தடம் புரண்டதில் நடத்துநர் ஸ்தலத்தில் பலி

### சிறுப்பிட்டியில் கோரம்

(யாழ்ப்பாணம்)

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மினிவான் தடம் புரண்டதில் நடந்துநர் ஸ்தலத்தில் உயிர் இழந்ததுடன் மேலும் 5பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் பருத்தித்துறை வீதி சிறுப்பிட்டி வைரவர் கோயிலடியில் இடம் பெற்றுள்ளது. நேற்று காலை 5.10 மணியளவில் அச்சுவேலியில் இருந்து (14ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் இடியுடன் கூடிய மழை இன்று பெய்யும் வாய்ப்பு உள்ளது!

### மக்களை அவதானமாக இருக்குமாறு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் அடுத்த 24 மணி நேரத்தில் இடியுடன் கூடிய கடும் மழைவீழ்ச்சி ஏற்படும் என யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் நேற்று மாலை அறிவித்தார்.

அடுத்த 24 மணி நேரத்தில் நாட்டின் வடபகுதியில் கடும் மழை வீழ்ச்சி ஏற்படும் வாய்ப்பு உள்ளது. இடி (14ஆம் பக்கம் பார்க்க)

## சனல்-4 தொலைக்காட்சியில் வெளியான வீடியோக்காட்சிகள் உண்மையானவை

### ரைம்ஸ் சஞ்சிகை தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை இராணுவம் தமிழ் இளைஞர்களை படுகொலை செய்வது போன்று சனல் 4 தொலைக்காட்சியில் வெளியான வீடியோக் காட்சிகள் மோசடிசெய்யப்பட்டவை அல்ல என்று ரைம்ஸ் சஞ்சிகை தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட வீடியோக் காட்சிகளை உரிய முறையில் பகுப்பாய்வுக்கு உட்படுத்தியதன் மூலம் அவை உண்மையானவை என்பதை தமது குழுவினர் உறுதிப்படுத்துள்ளதாக ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

முன்னதாக இலங்கை அரசாங்கம் குறிப்பிட்ட வீடியோக்காட்சிகள் போலியானவை என்றும் மோசடியான முறையில் தயாரிக்கப்பட்டதாகவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ரைம்ஸ் சஞ்சிகை குறிப்பிட்ட வீடியோ தொடர்பில் சுயாதீன விசாரணை ஒன்றை நடத்தியுள்ளது. கிரான் (14ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பொன்சேகாவை பதவியிலிருந்து நீக்குமாறு மன்மோகன் சொன்னார், மகிந்த செப்தார்

## பாக்.நேசன் பத்திரிகை தெரிவிப்பு

(இஸ்லாமாபாத்)

இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கின் அறிவுறுத்தலின் பிரகாரமே இலங்கையின் 'இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகாவை அந்த பதவியில் இருந்து மகிந்த ராஜபக்ஷ வெளியேற்றியதாக பாகிஸ்தான் நேசன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் இராணுவப் புரட்சி ஒன்று ஏற்படுவதற்கான ஏது நிலைகள் தோன்றி யுள்ளதாக இந்திய புலனாய்வு பிரிவின் மூலம் தனக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் எனவே உடனடியாக சரத் பொன்சேகாவை இராணுவத்தளபதி பதவியில் இருந்து அகற்றுமாறு மன்மோகன் சிங் மகிந்த ராஜபக்ஷவுக்கு அறிவுறுத்தியதாகவும் அதன் அடிப்படையிலேயே சரத் பொன்சேகாவை இராணுவத் தளபதி பதவியில் இருந்து உடனடியாக வெளியேற்றியதாகவும் அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

யுத்தம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து சரத் பொன்சேகா படையினர் மத்தியில் மிகப் பெரும் சக்தியாக உருவெடுத்திருந்தார். இந்த சூழ்நிலையானது இலங்கையில் ஒரு இராணுவப் புரட்சியை ஏற்படுத்திவிடும் என்று கொழும்பில் உள்ள றோ அதிகாரிகள் மூலம் இந்திய பிரதமருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளை போன்று இலங்கையிலும் இராணுவ ஆட்சி ஏற்படலாம் என்று மன்மோகன் சிங் இலங்கையின் ஜனாதிபதியை எச்சரித்துள்ளார்.

இராணுவத்தின் உயர் நிலை தளபதிகளை உடனடியாக இடமாற்று மாறும் அதிகளவு பலம் பொருந்திய வராக மாறியுள்ள சரத் பொன்சேகாவிற்கு அதிகாரங்கள் அற்ற பதவி ஒன்றை வழங்குமாறும் மன்மோகன் சிங் இலங்கை ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியதாகவும் நேசன் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்த நடவடிக்கைகளின் போது இலங்கை ஜனாதிபதியினதும் பாதுகாப்பு செயலாளரினதும் உத்தரவுகள் பலவற்றை சரத் பொன்சேகா நிறைவேற்றத் தவறியதாகவும் அந்த உத்தரவுகள் இந்தியாவின் ஆலோசனைக்கு அமைவாகவே பிறப்பிக்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சரத் பொன்சேகாவின் தன்னிச்சையான செயல்பாடுகளால் யுத்த களத்தில் இந்தியா விரும்பிய சில முக்கிய நிகழ்வுகள் இடம் பெறாது போய்விட்டதாகவும் அதனால் சரத் பொன்சேகா மீது இந்தியாவிற்கு கடும் விசனம் ஏற்பட்டிருந்ததாகவும் அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-5)

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு பரிசு

தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் கிளையில் சிறுவர் சேமிப்புக் கணக்கு களை வைத்திருக்கும் 2009ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்காக வங்கியால் வழங்கப்படும் பரிசில்களைப் பெறுவதற்கு வங்கிக்கணக்குப் புத்தகத்துடன் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் வங்கிக்கு வருகை தருமாறு முகாமையாளர் அறிவித்துள்ளார். (ச)

## நத்தார் ஒளிவிழா

நத்தார் தினத்தை முன்னிட்டு 51வது படைப்பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நத்தார் ஒளிவிழா (கரோல்) நிகழ்ச்சி எதிர்வரும் 27ஆம் திகதி மாலை 6மணிக்கு யாழ்.துரையப்பா மைதானத்தில் நடைபெறவுள்ளது.யாழ்.குடா நாட்டு அனைத்து மக்களையும் தவறாது சமுகம் தந்து நிகழ்வை சிறப்பிக்குமாறு படையினர் கேட்டுள்ளனர். (ச)


## கலையும் நீரும் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்



கட்ட, சிற்ப கலைஞர் கலாபூசணம்

**திரு. கோவிந்தபிள்ளை வேலுப்பிள்ளை**

அவர்கள் 15.12.2009 அன்று, கலை கலாசார அமைச்சினால் வழங்கப்படும் அதியுயர் விருதான கட்ட, சிற்ப *கலாபூசணம்* விருதைப் பெறுவதை அறிந்து பேருவகை அடைகின்றோம்.

*கடவுளின் கைவண்ணத்திலே அவதரித்து*
*கட்டக் கலைஞனென்ற பெயர் பெற்றாய்*
*கடவுளையே கலையம்சத்தோடு புடைக்கும்*
*படைப்பாளி திருவேலுப்பிள்ளைக் கலைஞனே*
*நீரும் நுண்கலையும் வாழீர் பல்லாண்டு!*

என வாழ்த்துவோர்:
வதிரி உல்லியனொல்லை கண்ணகை அம்பாள் பூங்காவன (14-ந் திருவிழா) கட்ட அமைப்புக்குழு
14-ந் திருவிழா உபயகாரர்.

வதிரி

(C-3937)



## வலி கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

## மீள்கேள்வி அறிவித்தல் - 2010

கீழ்க் குறிப்பிடப்படும் சந்தை, இறைச்சிக் கடைகளினை 2010ம் ஆண்டிற்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி:-16.12.2009-23.12.2009 நண்பகல் 12.00 மணிவரை**
**கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி:- 24.12.2009 பி.ப. 1.00 மணி வரை**
**கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி:- 24.12.2009 பி.ப.2.00 மணி**
(கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் போது கேள்விதாரரும் சமுகமளிக்கலாம்)

கேள்விகள் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப் பிரதியை '**செயலாளர், வலி கிழக்குப் பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்**' எனும் முகவரிக்கும், இணைப் பிரதியை '**பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்**' எனும் முகவரிக்கும் எதிர்வரும் 24.12.2009 நண்பகல் 01.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

| இல. | விபரம் | கேள்விப்பத்திரப் பணம் (வற் நீங்கலாக) | மீளளிக்கப்படக் கூடிய வைப்புப் பணம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| அச்சுவேலி உப அலுவலகம் | | | | |
| 01. | அச்சுவேலி ஆட்டிறைச்சிக் கடை | 250.00 | 500.00 | 38 000.00 |
| புத்தூர் உப அலுவலகம் | | | | |
| 01. | புத்தூர் பொதுச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 6900.00 |
| 02. | ஆவரங்கால் பொதுச் சந்தை | 100.00 | 250.00 | 12 350.00 |
| நீர்வேலி உப அலுவலகம் | | | | |
| 01. | நீர்வேலி ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 9500.00 |
| 02. | நீர்வேலி பொதுச் சந்தை | 100.00 | 250.00 | 7600.00 |
| 03. | நீர்வேலி மீன் சந்தை | 100.00 | 250.00 | 4750.00 |
| கோப்பாய் உப அலுவலகம் | | | | |
| 01. | கோப்பாய் வடக்குப் பொதுச் சந்தை | 200.00 | 500.00 | 14 250.00 |
| 02. | கோப்பாய் வடக்கு மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 71250.00 |
| 03. | கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 250.00 | 2850.00 |
| உரும்பிராய் உப அலுவலகம் | | | | |
| 01. | உரும்பிராய் மத்திய சந்தை | 500.00 | 2000.00 | 33 250.00 |
| 02. | ஊரெழு ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 6000.00 |

குறிப்பு:- மேலதிக விபரங்களையும், கேள்விப் பத்திரப் படிவங்களையும் உப அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளவும்.

வலி கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், புத்தூர்.
16.12.2009

தம்பையா நடராசா
செயலாளர்.

(C-3936)



## யாழ்ப்பாணம் மாநகரசபை ஆதனவரி அறிவித்தல் 2010

மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 252ஆம் அத்தியாயத்தின் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரங்களின்படி யாழ்ப்பாணம் மாநகர சபை பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளமை இத்தால் அறியத்தரப்படுகின்றது.

1. மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 238ஆம், 247ஆம் பிரிவுகளின் பிரகாரம் நேர்முன் ஆண்டான 2009ஆம் ஆண்டிற்கான பெறுமதி மதிப்பீட்டை அல்லது ஆதன மதிப்பீட்டையே 2010ஆண்டிற்கான மதிப்பீடாக அல்லது ஆதனவரி மதிப்பீடாகக் கொள்ளுதல்.

2. 2010ஆம் ஆண்டுக்கான வீதவரிப்பணங்கள் யாவும் நான்கு சம கந்தாய தவணைகளில் 2010ஆம் ஆண்டு முறையே மார்ச் 31, யூன் 30, செப்ரெம்பர் 30, டிசம்பர் 31 ஆகிய திகதிகளன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தப்படல் வேண்டும்.

3. 2010ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ வருடாந்த வீதவரிகள் முழுமையாகச் செலுத்தப்பட்டால் ஒரு பத்து சதவீதம் (10%) கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் வீதவரி வருமதியாகவுள்ள அந்தக் கந்தாயத்திற்குரிய முதல் மாதத்திற்குள்ளாக கந்தாயவரி செலுத்தப்பட்டால் ஒரு ஐந்து சதவீதம் (5%) கழிவு அனுமதிக்கப்படும்.

4. மேற் கூறப்பட்ட பந்தி 2இல் குறிப்பிடப்பட்ட உரிய திகதிகளுக்கு முன்பு குறித்த வீதவரிகளைச் செலுத்தாத விடத்து வெறும்காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது பதினைந்து (15%) சதவீதத்திலும் ஏனைய இடங்கள் மீது இருபது (20%) சதவீதத்திலுமான விறாத்துச் செலவு அறவிடப்படும்.

5. மேலும் புதிதாக காணி கட்டடங்களைக் கொள்வனவு செய்வோர் அவற்றுக்கான ஆதன பெயர் மாற்றங்களை உடனுக்குடன் மேற்கொள்ளுமாறும், புதிய கட்டடங்களைக்கட்டும் போதும், சேதமடைந்த ஆதனங்களைத் திருத்தம் செய்யும் போதும் மாநகர சபையின் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவுறுத்துகின்றேன்.

மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2009.12.15.

திருமதி யோகேஸ்வரி பற்குணராசா
மாநகர முதல்வர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

(C-3938)

# இன்று ஒரு தகவல்

## அந்த இரண்டு காசுகள்

ஜெருசலேத்திலுள்ள ஒரு தேவாலயத்தில் காணிக்கைப் பெட்டியொன்று வைக்கப்பட்டிருந்தது.

ஆலயத்துக்கு வருபவர்கள் பிரார்த்தனை செய்து விட்டு திரும்பிப் போகும் சமயத்தில் அந்தப் பெட்டியில் காணிக்கை போடுவார்கள்.

அவர்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு அவரவர் வசதிக்கு தகுந்தாற் போல் போடுவார்கள்.

வசதியுள்ளவர்களாக இருந்தாலும் சரி... வசதியில்லாதவர்களாக இருந்தாலும் சரி... ஆலயக் காணிக்கைப் பெட்டியில் காசு போடுவது அவர்களுக்கு மிகவும் பெருமையான ஒரு செயல்.

ஒரு சமயம் இயேசு தம்முடைய சீடர்களுடன் அந்த ஆலயத்திற்கு வந்தார். அங்கு உட்கார்ந்து நீண்ட நேரம் வழிபாடு செய்தார். சீடர்களும் அந்த வழிபாட்டில் கலந்து கொண்டார்கள்.

வழிபாடு முடிந்ததும் இயேசு உட்கார்ந்து காணிக்கைப் பெட்டியில் காசு போடுபவர்களைக் கவனித்தார். சீடர்களும் அதைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

பலர் வரிசையாக வந்து அவர்களால் முடிந்தளவு காசு போட்டுவிட்டுப் போனார்கள். வசதியானவர்கள் பலர் வந்தார்கள். அதற்கு மத்தியில் ஒரு அம்மாவும் வந்து அதில் காசு போட்டுவிட்டுப் போனார்.

அதன்பின் இயேசு தன் சீடர்கள் பக்கம் திரும்பி "இன்றைக்கு இந்தக் காணிக்கைப் பெட்டியில் அதிகமாகக் காசு போட்டது யார்?" என்று கேட்டார்.

"முதலில் வந்தாரே ஒரு பெரிய மனுஷன்... அவர் தான் அதிகமாகப் போட்டார்" என்றார் ஒருவர்.

"மூன்றாவது வந்தவர் தான் அதிகமாகப் போட்டார்" என்றார் இன்னொருவர். இப்படி ஆளுக்காள் கூறினார்கள்.

கடைசியாக இயேசு சொன்னார்.

"இன்றைக்கு அந்தப் பெட்டியில் அதிகமாகக் காசு போட்டது அந்த வயதான அம்மா தான்" என்றார்.

சீடர்களுக்கு ஒன்றும் புரியவில்லை...

அந்த அம்மா மிகவும் ஏழையாச்சே... அவர் எப்படி அதிகமாகக் காணிக்கை செலுத்த முடியும்? என்பது அவர்களது சந்தேகம். இயேசு விளக்கினார்.

"பலர் வந்தார்கள். நிறையக் காசுகள் போட்டார்கள். அது உண்மைதான். ஆனாலும் அந்த அம்மா என்ன செய்தார் தெரியுமா? தன்னுடைய காசுப் பையைத் திறந்து அப்படியே கொட்டினார். அதில் இருந்தது இரண்டே இரண்டு காசுகள் தான். அந்த இரண்டு காசும் காணிக்கைப் பெட்டியில் விழுந்து விட்டது. மற்றவர்களெல்லாம் தங்களிடமிருந்த செல்வத்தின் ஒரு சிறு பகுதியை எடுத்துப் பெட்டியில் போட்டார்கள். ஆனால் அந்த அம்மா தன்னிடம் என்ன இருந்ததோ... அதை அப்படியே போட்டு விட்டார்.

தன்னுடைய பிழைப்புக்காக வைத்திருந்த அவ்வளவையும் இழப்பதற்குத் தயாராகி விட்டார். தாராளமனம் அவருக்கு. அதனால் அவர் செலுத்திய காணிக்கை தான் அதிகம் என்றார்.

"விலை மதிப்பில்லாத முத்துப் புதையல் ஒருவனுக்குக் கிடைக்கப் போகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதன் மதிப்பை உணர்ந்தவன் என்னசெய்வான்? அதை அடைவதற்காக தன்னிடமுள்ள எதையும் கொடுக்கத் தயாராவான். அது மாதிரித்தான் இதுவும்" என்றார்.

உலக மதிப்பீடுகளைத் துரும்பாக – தூசியாக மதித்து அவற்றை உதறிவிடுபவன் இறையருள் என்னும் இணையில்லாத செல்வத்தைப் பெறுகிறான் என்பது இதிலுள்ள கருத்து.

இறைவனுக்காக இழப்பது என்றால் துன்பப்படுபவர்களுக்காக – ஏழைகளுக்காக, ஏதுமற்றவர்களுக்காக இழப்பது என்று அர்த்தம்.

"உங்கள் அயலவனுக்கு நீங்கள் என்ன உதவி செய்தாலும் அதை எனக்கே செய்கிறீர்கள். என்று இயேசு சொல்லியிருக்கிறார்."

மற்றவர்களுக்கு உதவி செய்யும் குணம் இன்றைக்கு மிகவும் குறைந்துவிட்டது.

ஒருத்தன் வாழைப்பழத்தோல் வழுக்கிக் கீழே விழுந்து விட்டான். பக்கத்திலிருந்த நண்பன் உடனே இவனைத் தூக்கிக்கொண்டு போய் ஆஸ்பத்திரியில் சேர்த்தான்.

அதன்பின் சொன்னான் "நீ அந்த வாழைப்பழத்தோலில் கால் வைக்கப் போவதை நான் முன்னாடியே கவனித்து விட்டேன்". என்றான்.

"அப்படியானால் நீ எனக்கு அப்பவே உதவி செய்திருக்கலாமே" என்றான் அவன்,

"நான் டாக்டருக்கு உதவலாம் என்று நினைத்தேன்" என்றான் இவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# உலக ஈர நில தினத்திற்கான ஓவியப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

உலக ஈரநில தினத்தை முன்னிட்டு மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட ஓவியப் போட்டியில் மாகாண மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் பெயர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இம் மாணவர்களிற்கான தேசிய மட்ட போட்டி எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளதால் அன்றைய தினம் காலை 7.30 மணிக்கு இல.104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை பத்தரமுல்லவில் அமைந்துள்ள மத்திய சுற்றாடல் அதிகார சபை தலைமை அலுவலகத்திற்கு சமூகமளிக்குமாறு மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வடக்கு மாகாண உதவிப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**சிரேஷ்ட பிரிவு**

வி. சந்திரதாஸ் விமல் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), போ. டேமினியன்ராஜ் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), நா. கார்த்திக் (வைத்தீஸ்வராக் கல்லூரி).

**கனிஷ்ட பிரிவு**

ர. முகமட் யாசர் (வண்ணை நாவலர் வித்தியாலயம்), ஜெ. ஜனுஷா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), பா. பிரியந்தினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி). (6-4)

# கொழும்பு - இத்தாலி நேரடி விமான சேவை

(கொழும்பு)

கொழும்பில் இருந்து இத்தாலிக்கான நேரடி விமான சேவை இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஸ்ரீலங்கா விமான சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது. வாரத்தில் இரு தினங்கள் புதிய விமான சேவைகள் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இலங்கையில் அமைதியான சூழல் உருவாக்கப்பட்டுள்ளதால் இத்தாலி மற்றும் ஐரோப்பிய நாட்டு சுற்றுலா பயணிகள் மற்றும் அங்குள்ள இலங்கையர்கள் நேரடியாக இங்கு வருகை தரும் வகையில் இந்த சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-2)

# சந்தைப் பொருட்கள் விலையுயர்வு

(வடமராட்சி கிழக்கு)

நாட்டில் பெய்துவரும் பலத்த மழை காரணமாக வடமராட்சி, வடமராட்சிகிழக்கு ஆகிய பகுதிகளில் கடல் கொந்தளிப்பான நிலையில் உள்ளதால் மீனவர்கள் எவரும் தொழிலுக்கு செல்லவில்லை.

இதனால் மரக்கறிகளின் விலை உயர்வடைந்துள்ளதுடன் கருவாடு, கோழி இறைச்சி ஆகியவற்றுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (2-4-99)

# இராசி பலன்

*16-12-2009*
*(மார்கழி 01 புதன்கிழமை)*
*அமாவாசை மாலை 5.53 மணிவரை*
*கேட்டை பிற்பகல் 4.59 மணிவரை*
*இராகுகாலம் 12.22-1.52 மணிவரை*
*சுபநேரம் 4.52-6.22 மணிவரை*
*அமாவாசை விரதம்*

| | |
|---|---|
| மேடம் | மனக்கவலை, வேலைச்சுமை, ஆரோக்கியக் குறைவு, முயற்சி தாமதம். |
| இடபம் | எடுத்த காரியம் கைகூடும், தன வருவாய், கீர்த்தி, விருந்துபசாரம். |
| மிதுனம் | சத்துருஜெயம், தடைப்பட்ட காரியம் கைகூடும், நல்ல செய்தி, போசன நன்மை. |
| கடகம் | அதிக செலவு, அஜீரண ரோகம், காரிய இடையூறு, தாழ்ந்த சுபாவம். |
| சிங்கம் | சுபநிகழ்வு, நல்ல முயற்சி, உறவினர் சந்திப்பு, புதிய தகவல். |
| கன்னி | நற்கீர்த்தி, பிரயாண நன்மை, முயற்சி கைகூடும், பொருள் சேர்க்கை. |
| துலாம் | போசன சுகக்குறைவு, கௌரவக் குறைவு, முயற்சி தாமதம், ரோகநிலை. |
| விருச்சிகம் | புதிய முயற்சி, வெகுமானம், உறவினர் வருகை, தெளிந்த சிந்தை. |
| தனுசு | சோம்பல் நிலை, பிறருக்கு உதவுதல், உஷ்ண நிலை, முயற்சி தாமதம். |
| மகரம் | நண்பர்கள் வருகை, சயன சுகம், எடுத்த காரியம் கைகூடும், தனலாபம். |
| கும்பம் | ஆரோக்கிய நிலை, பெரியோரால் மதிக்கப்படுதல், மனமகிழ்ச்சி, நல்ல செய்தி. |
| மீனம் | உத்தியோக பங்கம், புதிய திருப்பம், பயணம், தனவிரயம். |

வளவன்

# மின்னல் தாக்கி யுவதி மரணம்

அம்பாறை மாவட்டத்தின் இறக்காமம் கிராமத்தில் மின்னல் தாக்கி யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் இரவு கடும் மின்னல் ஏற்பட்டபோது இந்த யுவதி வீட்டு யன்னலுக்கு அருகில் இருந்த போது மின்னல் தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

மின்னல் தாக்கத்திற்கு இலக்கான இந்த யுவதியின் சடலம் அம்பாறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (6-9)

# சூரியக் குடும்பத்தில் மேலும் 3 புதிய கோள்கள் கண்டுபிடிப்பு

(எடின்பார்க்)

சூரிய குடும்பத்தில் பூமி, செவ்வாய், புதன் உள்ளிட்ட கிரகங்கள் உள்ளன.

இந்த நிலையில் தற்போது மேலும் 3 புதிய கிரகங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவற்றை இங்கிலாந்து அவுஸ்திரேலியா மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த வானவியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

இங்கிலாந்தில் நியூசவுத் வேல்ஸ்சில் உள்ள ஆங்கிலோ – ஆஸ்திரேலியன் தொலைக்காட்டி மூலமும், ஆஸ்திரேலியாவில் ஹவாலியில் உள்ள கெக் தொலைக்காட்டி மூலமும் அடையாளம் கண்டனர்.




இந்த புதிய கோள்களும் பரப்பளவில் பூமியை விட 5 முதல் 25 மடங்கு பெரியது.

இது சூரியனில் இருந்து 27.8 ஒளி வருடங்களுக்கு அப்பால் உள்ளது. இவற்றை வெறுங் கண்ணால் பார்க்க முடியும். (6)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100-120 | 100-120 | 150 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 220 | 240 | 270 |
| தக்காளி | 120 | 130 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 85 | 100 | 80 |
| கரட் | 80 | 90 | 110 |
| பூசணி | 55 | 60 | 60 |
| புடோல் | 60 | 90 | 100 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 130 | 150 |
| பெரிய வெங்காயம் | 140 | 150 | 160 |
| பாகற்காய் | 80 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 50 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 90 | 100 | 100 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 70 | 100 | 100 |
| கறிமிளகாய் | 140 | 160 | 280 |
| முருங்கைக்காய் | 160 | 180 | -- |
| போஞ்சி | -- | -- | -- |
| கத்தரி தம்புள்ள | -- | -- | -- |
| கீரை – 1 பிடி | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 140 | 160 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |

# விவாத அரங்கு 2

# யாழ்ப்பாண குடாநாட்டின் வீதிகளை உடனடியாக விஸ்தரிக்க வேண்டும்

யாழ். குடாநாட்டின் வீதிகளை உடனடியாக விஸ்தரிக்க வேண்டும் என்ற கருத்தை ஆதரித்தும், எதிர்த்தும் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இரண்டு தரப்பின் கருத்துக்களும் அடியோடு நிராகரிக்கப்படக்கூடியவை யல்ல. இரண்டு பக்கங்களிலும் நியாயங்கள் உண்டு என்பது மறுக்க முடியாத உண்மை.

எனினும் காலத்தின் தேவைக்கேற்ப எங்கள் சிந்தனைகள் அமைய வேண்டிய தேவையுள்ளது.

வீதிகளை விஸ்தரித்தல் என்ற விடயம் குறுங்கால நோக்குடனோ அன்றி அதனால் ஏற்படக்கூடிய சிறிய பாதிப்புக்களுடனோ தொடர்புபடுத்தப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.

இன்றைய யாழ்ப்பாணநகரமைப்பு போதுமானதல்ல என்ற உண்மையை உணரவைத்துள்ளது.

இந்த உண்மை பல வருடங்களுக்கு முன்னர் உணரப்பட்டிருக்குமாயின் வீதிகளை ஆக்கிரமிக்கும் வர்த்தக நிலையங்களும் வாகனத் தரிப்பிடம் பற்றி சிந்திக்காத வங்கிகளும், வணிக நிலையங்களும் தோன்றியிருக்க மாட்டா ?

அன்று யாழ்ப்பாண நகர் பற்றிய ஓர் விரிவான சிந்தனை இன்மையே வசதிகளற்ற இன்றைய யாழ்ப்பாணநகரமாகும்.

பொதுவில் தமிழ் மக்கள், எதிர்காலம் பற்றிய நினைப்பில் தவறு விட்டு விடுகின்றார் கள் என்ற குற்றச்சாட்டு உண்டு.

உடனடித் தேவைகளுக்கு முன்னுரிமை கொடுப்பதிலேயே அதிக கவனம் செலுத்துவதால் எதிர்காலம் பற்றிய நினைப்பு இல்லாமல் போய்விடுகின்றது.

இதற்கு யாழ்ப்பாணத்தில் இருக்கக் கூடிய முக்கிய வீதிகள் சான்றுபகரும்.

யாழ்ப்பாணம் கே.கே.எஸ்.வீதி , பலாலி வீதி ,பருத்தித்துறை வீதி,கண்டி வீதி, மானிப்பாய் வீதி என்பவற்றின் ஒடுக்கம் இன்றைய சமூக ,பொருளாதார முன்னேற்றத்திற்கு தடை போடுகின்றன.

யுத்த சூழ்நிலை ,அதனால் ஏற்பட்ட இடப் பெயர்வு என்பன யாழ்ப்பாண நகர மையத்தில் குடியிருப்போர் தொகையை அதிகரித்து விட, நிலங்களின் விலைகள் பல இலட்சத்தைத் தாண்டிவிட்டன.

இந்நிலையில் வீதி விஸ்தரிப்பை மேற் கொள்வதற்கு முக்கிய வீதிகளின் இருமருங்கிலும் இருக்கக்கூடிய நில உரிமையாளர்கள் சம்மதம் தெரிவிக்கமாட்டார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை. அவர்களின் சம்மதத்துடன் வீதி விஸ்தரிப்பு இடம்பெறுவதாக இருந்தால் அது இந்த யுகத்தில் சாத்தியமாகாத விடயமாகிவிடும்.

## விவாத அரங்கு -02 தீர்ப்பு

வீதி விஸ்தரிப்பு இன்றைய சமூக, பொருளாதார வளர்ச்சி வேகத்தில் கட்டாயமானதாக அமைகின்றது.

### ஏ-9 பாதை திறப்பு

யுத்த காலத்திற்குள் மூழ்கியிருந்த யாழ்ப்பாணத்தையும் தற்போது ஏ-9 பாதை திறக்கப்பட்டதன் பின்னரான யாழ்ப்பாணத்தையும் ஒரே கண் கொண்டு பார்க்க முடியாது.

ஏ-9 பாதை திறக்கப்பட்டதன் பின்னர் கனரக வாகனங்களின் வரவு நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது.

இதற்கு மேலாக யாழ்ப்பாணத்தில் மோட்டார் சைக்கிள்களின் விற்பனை மத்திய வங்கியின் ஆளுநரையே அதிசயிக்கத்தக்கவகையில் அமைந்துள்ளது.

தற்போதைய யாழ்ப்பாண நகரத்தில் காணப்படும் சனக்கூட்டமும், வாகன நெருக்கடியும் எங்கள் யாழ்ப்பாண நகர

### உரிய பெறுமதி வழங்க வேண்டும்

வீதி விஸ்தரிப்பு என்பது பொது நோக்கில் செயற்படவேண்டியது .அதேநேரம் வீதி விஸ்தரிப்பினால் ஒரு குறிப்பிட்ட தொகை யினர் பாதிப்படைவதையும் அனுமதிக்க முடியாது.

எனவே வீதி விஸ்தரிப்பை உடனடியாக முன்னெடுக்கும் அதே நேரம் வீதி விஸ்தரிப்புக்காக விட்டுத் தரப்படும் நிலத்தின் நியாய பூர்வமான பெறுமதியை உரிமையாளர்களுக்கு வழங்குவதீ கட்டாயமானதாகும்.

வீதி விஸ்தரிப்பை இப்போது செய்யத் தவறின் எதிர்காலத்தில் அதற்கான இழப்பீடுகள் ஏராளமாக இருக்கும் என்ற உண்மை மறப்பதற்குரியதல்ல.

அதேசமயம் வீதி விஸ்தரிப்பின் போது அதற்கான உள்ளீடுகளை யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொள்வது எமது மண்ணின் சூழலுக்கு ஆரோக்கியம் அல்ல என்ற நியாயமான கருத்தையும் புறந்தள்ளி விட முடியாது.ஆகவே விஸ்தரிப்புக்கு தேவையான கல்,மண் உள்ளிட்டவற்றை தென் பகுதியில் இருந்து பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும்.

### யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் அவர்களின் கருத்து

**நீண்டகால அபிவிருத்திக்கு வீதிகளை அகலமாக்குவது அவசியமாகின்றது. அதேநேரத்தில் இந்த நடவடிக்கை மூலம் பாதிக்கப்படுபவர்களின் நிலை தொடர்பிலும் கவனத்தில் கொள்ள வேண்டும்.**

**வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் பராமரிக்கப்படும் வீதிகள் அகலமாக்கப்படுவது அவசியமாகின்றது.அத்துடன் நிதியுதவிகள் கிடைக்கும் போதே எமது மாவட்ட அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடியும்.**

**தற்போது மீளமைப்பு அபிவிருத்திப் பணிகளுக்கு என நிதியுதவிகள் கிடைக்கின்றன.இந்த சந்தர்ப்பங்களை பயன்படுத்தி கிடைக்கின்ற நிதியுதவிகளை திரும்ப விடாமல் எமது மாவட்ட அபிவிருத்தியை முன்னெடுப்பது எல்லோருடைய கடமையாகும்.**

**இது தொடர்பில் எல்லோரும் ஒன்றிணைந்து மனம் திறந்து கருத்துக்களைப் பரிமாறி பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்.தற்போது ஏற்படும் சிறிய சிறிய இழப்புக்களை விட்டுக்கொடுப்போமேயானால் அது எமது எதிர்காலச் சந்ததியினருக்கு நன்மையாக அமையும். எனவே மாவட்டத்தின் நீண்டகால அபிவிருத்திக்கு வீதிகளை அகலமாக்குவது அவசியமாகின்றது.**

ஆதித்தன்

# ஈழத்துச் சைவசித்தாந்த அபிவிருத்திப் பணியில் சேர்.பொன்.இராமநாதன் (1851-1930) 03

பேராசிரியர்
கலைவாணி இராமநாதன்

அடுத்துள்ள இரண்டு இயல்களும் மேற் குறித்த இறைவனது -உயிர்களது-உல கினது -உண்மையியல்பை உணர்ந்து அறி வினால் தெளிந்து கொண்டால் அவற்றுள் சிக்குண்டு உலையாது அவற்றின் பிடியி லிருந்து தன்னை விடுவிக்கும் மார்க்கங் களில் ஈடுபடுதலைச் சாதனையாகவும் -அச் சாதனையின் பயன் " வீடுபேறு " அல்லது " மோட்ச நிலை" அடைதல் எனவும் நிறுவி யுள்ளது. இச்சாதனை இயலே சைவசித்தாந் தம் கூறும் சிறப்பொழுக்கமாகும்.

அவை சரியை , கிரியை,யோகம் ,ஞானம் என நான்காக உணர்த்தப்படும். இந்த நான்கு நிலையிலும் மனிதனானவன் ஆற் றும் சாதனைகளே அவனைச் "சாதனையா ளன் " என உலகம் போற்ற வைக்கின்றது. சைவசித்தாந்தம் கூறும் இந்த நால்வகை சாதனை மார்க்கங்களையும்வாழ்விலே கடைப் பிடித்து ஈழத்து சைவசித்தாந்த அபிவிருத்தி பணிகளில் பெரும் சாதனை படைத்தவருள் சேர்.பொன் இராமநாதன் அவர்கள் தன்னி கரற்றசித்தாந்த சாதனையாளராக விளங்கினார். அன்னார் ஈழத்தமிழ் சமூகத்தினருக்கும் உல கிற்கும் ஆற்றிய சைவசித்தாந்த அபிவிருத் திப் பணிகளை மேற்கொண்டு நோக்கலாம்.

**சைவசித்தாந்த அபிவிருத்திப் பணியில்**

அருட்பரானந்த சுவாமிகளால் ஆட்கொள் ளப்பட்டு இல்லறஞானிகளாக வாழ்ந்த இரு வரில் ஒருவர் சேர் .பொன் இராமநாதன் அடுத்தவர் சேர்.பொன் அருணாசலம் ஆவார். இருவரும் சுவாமி விவேகானந்தர், சுவாமி அரவிந்தர் என்பர். மேலை நாடுகளில் வேதாந்த விளக்கம் செய்தமை போன்று ஆங்கில மொழி மூலம் சைவசித்தாந்த மெய்யி யலை உலகறியச் செய்தவர்கள் தாயுமானார். பாடல் , திருமுருகாற்றுப்படை போன்ற சைவ மெய்யியல் பொதிந்தஇலக்கிய ஆக் கங்களை சேர்.பொன் அருணாசலம் இத மான ஆங்கில நடையில் மொழி பெயர்ந் தார். பல்துறை விற்பன்னரும் விவேகஞா னியுமான சேர்.பொன் இராமநாதன் அமெ ரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் சமய மெய்யியற் சொற்பொழிவுகள் ஆற்றினார். 1905 , 1906 ஆம் ஆண்டுகளில் சைவசித் தாந்தம் என்று சொல்லாமலேயே விவிலிய நூற்கருத்துக்கட்கு விளக்கமளிக்கும் வகை யில் வாழ்வியல் இலட்சியத்தை விளக்கமாக உரைக்கும் வகையாலும் சைவசித்தாந்தப் புதைபொருள் முழுவதையும் மேலைத்தேச மக்கள் நன்கு புரிந்து கொள்ளுமாறு விளங்க வைத்தார்.

சைவசித்தாந்த அபிவிருத்தி பணிகள் என்னும் இப் பகுதியில் சேர்.பொன் இராம நாதன் அவர்கள் சைவசித்தாந்தமெய்யிலை ஐயம் திரிபறக் கற்றுணர்ந்து அதனை தமது வாழ்நாளில் கடைப் பிடித்து சாதனை யாக்கிய மையுமே அன்னராது முக்கியமான சித் தாந்த விருத்திக்குரிய பணியாகும். சைவ சிந்தாந்த மெய் யியல் காட்டும் வாழ்வியலில் எவ்வாறு அபிவிருத்தி பெற வேண்டும் என்ற வேணவாவினால் அவர் என்னென்ன பணிகள் , சேவைகள் ,தொண்டுகள் ஆற்ற வேண்டும் என்பதும் அதற்கான அடித்தளம் எப்படி அமைய வேண்டும் என்பதனையும் சேர்.பொன். அவர்கள் எவ்வாறு சாதித்தார் என் பதுவே இப் பகுதியில் கூறப்படும் விடயமாகும்.

அந்த வகையில் சைவசித்தாந்தத்தின் முதல் நூலான சிவஞானபோத வழிகாட்ட லின் வழி நின்று அதுகூறும்சாதனை இய லுக்கு வடிவமும் வாழும்பண்பும் கொடுத் தமையே அவரது உன்னதமான ஆளு மையாகும். சைவசித் தாந்த மெய்யியல் பற்றி பேசும் போதுபலரும் பிரமாணவியலும் இலக் கணவியலும் தான் சைவசித்தாந்தம் என விளங்கிக் கொண்டு பேசுவதே இயல்பாக உள்ளது. அதனால் அவை வெறும் சாத்திர ஞானமாகவே நின்று விடுகின்றன.

சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் அவற் றையும் கடந்து சித்தாந்த சாத்திர ஞானத்தின் இலட்சியமாகிய சாதனை -பயன் இயலின் வழி நின்று சித்தாந்த ஞானசாதனைகட்கு அபிவிருத்தி வடிவம் கொடுத்து இயக்க ஆற் றலை வழங்கியமை மிகப் பெரும் சாதனை யாகும். ஞானம் என்பது வெறும் ஏட்டுக்கல்வி அல்ல வாழ்வியற் கல்வி என்பதனை தமது ஒவ்வோர் பணிகளிலும் ,சேவைகளில் நிலை பெறச் செய்தார். அத்தகைய அவரது சைவ சித்தாந்த அபிவிருத்திப் பணிகளை பின்வரு மாறு அடையாளம் காட்டலாம்.

1.சரியைநெறியில் அவரது பணிகள்
2.கிரியை நெறியில் அவரது பணிகள்
3.யோக நெறியில் அவரது பணிகள்
4.ஞான நெறியில் அவரது பணிகள்

எனப்பகுத்து நோக்குவது சாலப் பொருத் தமாகும்.

''சங்கரனை அடையும் நன்மார்க்கம் நான்கு- அவை சரியை,கிரியை,யோகம் ஞானம் என நவிற்றுவதும் செய்வார்" ,(சித்தி யார் ,சாதனை இயல்)

சித்தாந்தம் கூறும் சாதனமார்க்கங்களில் மேற்குறிப்பிட்ட நான்கு நெறிகளும் தேவார கால நாயன்மார்கள் வாழ்ந்து காட்டிய சாத னைகளாகும். அந்தமார்க்கத்தில் சரியை எனில் உழவாரப் பணிமட்டுமே எனவும் கிரியை எனில் ஆலயப் பூசைக்கிரியைகள் எனவும் யோகம் எனில் மூக்கைப்பிடித்துகாற்றை நிறுத்திப் மூச்சுப் பயிற்சி செய்தல் எனவும் ஞானம் என்பது சித்தாந்த சாத்திரப் பயிற்சி பெறுதல் மாத்திரம் என்பதாகவுமே நம்மில் பலரும் விளக்கம் கண்டுள்ளனர்.

நான்கு வகையான சாதனமார்க்கங்கள் அவை மட்டுமல்ல . அவற்றிற்கு மேலும் உள் ளன என்பதனை நாயன்மார்களே செயல் படுத்திக் காட்டினார். நாட்டிலே பஞ்சம் வந் தால் இறைவனிடம் படிக்காசு பெற்று பஞ்சம் தீர்ப்பதும் , நோய்வாய்ப்பட்டால் நோயைத் தீர்த்து அடியவர்களை ஆதரிப்பதும், இறந் தவரைத் துயிலெழுப்பி மக்கள் தம் துயர் துடைப்பதும் மிகப்பெரிய சமூகசேவையென சம்பந்தர் அறிவுறுத்தினார்.

கிரியை என்பது திருக்கோயில் பூசை கிரியைகள் மட்டுல்ல- சமுதாயத்திற்கும மக்கட் கும் ஆற்றும் துயர் துடைப்பும் பணிகளும் கிரியை என்னும் செயல்வழி அறச்செயல் என் பதைச் சம்பந்தர் வாழ்வியல் விளக்கியது. அப்பர் சுவாமிகள் சமணரின் கொடுமைகளை எல்லாம் இறையருளால் தாங்குவதானது. உலகிலே முதன்முதன் அகிம்சைக் கோட்பாட் டின் வழி மறத்தை வென்ற நிலையையும் அப்பரின் சித்தாந்த வாழ்வியல் உணர்த்தி யது. அப்பர் சுவாமிகள் மேற்கொண்ட ஆரா அன்பினால் அப்பர் ஆற்றிய ஆலயத்திருக் தொண்டினை சமுதாய அறப்பணியாக் கியவர் அப்பூதியடிகள். திருநாவுக்கரசர் தண்ணீர்ப்பந்தல் , திருநாவுக்கரசர் அன்ன தானமடம் என அனைத்து அறப்பணியை யும் அப்பர் சுவாமிகட்கு அர்ப்பணமாக்கிய அப் பூதியடிகள் வாயிலாகசரியைப் பணிகள் யாவை என்பது விளக்கமுறும். (தொடரும்)

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரின் ஆதரவு தற்போதைய அரசாங்கத்துக்கே கிடைக்கும்

## டிலான் பெரேரா எதிர்பார்ப்பு

(கொழும்பு)

யுத்தத்துக்கு பின்னரான நிலைமையில் உள்ள எமதுநாட்டை 40 வருட அரசியல் அனுபவம் கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும். எனவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு



அரசாங்கத்தை ஆதரிக்கும் என்று எதிர்பார்க்கின்றோம் என துறைமுக அபி விருத்திஅமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர் தல் நிலை மைகள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற் கண் டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது, எதிரணி கூட்டணி தொடர்ந்து முரண்பாடான கருத்துக் களையே முன்வைத்து வருகின்றது. தேசிய பிரச்சினை தீர்வு விடயத்தில் அரசியலமைப் பின் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல் வதாக எதிரணி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா கூறுகின்றார். அப்படியாயின் மக்கள் விடுதலை முன்னணியின் நிலைப் பாடு என்ன?

பொருளாதாரத் திட்டங்கள் தொடர்பில் என்ன வேலைத்திட்டம் உள்ளது ? என்று தெரியவில்லை. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் என்று எதிரணிக்கூட்டணி கூறுகின்றது. ஆனால் தான் வெற்றிபெற்றால் ஒரு சில அதிகாரங்களுடன் ஜனாதிபதியாக இருப் பேன் என்கிறார் எதிரணி வேட்பாளர்.

இவ்வாறு பலவழிகளிலும் எதிரணி கூட் டணி குழப்பங்கள் றிறைந்ததாகவே காணப் படுகின்றது. எனவே தமிழ்த்தேசிய கூட்ட மைப்பு இந்தவிடயத்தில் மிகவும் சிறந்த தீர் மானத்தை எடுக்கவேண்டும்.

அதாவது அரசாங்கத்துக்கு கூட்டமைப்பு ஆதரவளிக்க வேண்டும் என்று நான் எதிர் பார்கின்றேன். காரணம் தற்போது ஏற்பட் டுள்ள யுத்தத்துக்கு பின்னரான நாட்டை சிறப்பாக கட்டியெழுப் பும் 40 வருட அரசியல் அனுபவம் கொண்ட ஜனாதிபதியினால் மட்டுமே முடியும்.

இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்ற விவகாரத்தைபாருங்கள். அரசாங்கம் அந்த மக்களை மிகவும் விரைவாக மீள்குடியேற்றி வருகின்றது. நலன்புரி முகாம்களை பார்வை யிட்ட தமிழ்க்கூட்டமைப்பு எம்.பி. க்கள் சிலர் செய்துகொடுக்கப்பட்டுள்ள வசதிகள் தொடர் பில் திருப்திவெளியிட்டுள்ளனர்.

மேலும் இந்தியாவிலிருந்து வருகை தந்த தமிழக எம்.பிக்களும் நலன்புரி நிலையங் களில் செய்து கொடுக்கப்பட்டுள்ள வசதிகள் தொடர்பில் திருப்தி வெளியிட்டனர்.

அரசாங்கம் முழுமையான அர்ப்பணிப் புடன் இந்த வேலைத் திட்டங்களை மேற் கொண்டு வருகின்றது என்று தெரிவித்தார்.

(6- 2)

# யுத்தகாலப் பிரச்சினையை முன்வைத்து படையினரைக் காட்டிக் கொடுக்கிறார்

## பொன்சேகா மீது திஸாநாயக்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஜெனரல் சரத் பொன்சேகா யுத் தத்தில் உயிர் களை அர்ப் பணித்து அங்கவீனமான படையினரைக் காட்டிக் கொடுக்கும் கீழ்மட்டத்திற்கு தள்ளப் பட்டுள்ளார் என்று எஸ்.பி. திஸாநாயக்க தெரி வித்துள்ளார்.

அதிகாரப் பரவலாக்கலை வழங்கி தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்கக் கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவே ஆவார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பாக எஸ்.பி. திஸாநாயக்க மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் நடைபெற்ற இறுதிக்காலகட்டத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான குற் றச்சாட்டுக்களை எவர் மீதாவது சுமத்த முடியும். ஆனால் படையினரின் அர்ப்பணிப்பை கொச் சைப்படுத்துவதாக இந்த நிலைமை அமைந் துவிடும்.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தின்போது வெள் ளைக் கொடியோடு வரும் புலி உறுப்பினர் களைக் கைது செய்யுமாறு பாதுகாப்புச்செய லாளர் கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்ட தாகவும்,

ஆனால் அதனை மீறி சரணடைவோரை அழித் துவிட வேண்டுமென்றும் அன்றைய இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா உத்தரவிட் தாகவுமே நாம் அறி வோம்.

இதுதொடர்பில் இந்தியாவுடன்பேச்சுக்களும் நடத்தப்பட்டதாகவே நாமறிவோம்.

எது எவ்வாறெனினும் யுத்த காலத்தில் பல சம்பவங்கள் இடம்பெற்றிருக்கலாம்.

அன்று ஜே.வி.பி. கிளர்ச்சியின்போது கைது செய்யப்பட்ட தலைவர்கள் தப்பியோட முயற்சித்தார்கள், தாக்கினார்கள் என்ற குற் றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டு கொலை செய் யப்பட்டனர். இதன்போது ஐ.தே.கட்சி அரசாங் கமே ஆட்சியிலிருந்தது.

எனவே, இன்று யுத்தகாலப் பிரச்சி னையை முதன்மைப்படுத்தி குற்றச்சாட்டுக் களை முன்வைக்க முனைவதென்பது ஜென ரல் பொன்சேகாவின் காட்டிக்கொடுப்பி னையும் அரசியலுக்காக தமிழ் மக்களின் வாக் குகளை பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள் ளப்படும் முயற்சியாகவுமே கருதவேண்டி யுள்ளது என்று அவர் மேலும் தெரிவித் துள்ளார். (6-2)

# விஜயநகரப் பேரரசுக் கால சமய நூல்கள் (கி.பி.1100-1700)

பேராசிரியர் மு.வரதராசன்

79

**சிவஞான முனிவர்**

திருவாவடுதுறை மடத்தச் சார்ந்தவர் ஈசான தேசிகர் என்னும் சாமிநாததேசிகர். அவர் இலக்கணக் கொத்து என்னும் நூலை இயற்றியதோடு, கலம்பகம் முதலான சில இலக்கியங்களும் இயற்றினார். அவருடைய மாணவர் சங்கரநமச்சிவாயர் தன்னூலுக்கு உரை எழுதினார். மடத்தைச் சார்ந்த பெரும் புலவராகிய சிவஞான முனிவர் (18ஆம் நூற்றாண்டில்) அந்த உரையை விரிவாக்கினார். வடமொழி,தமிழ் இரண்டிலும் தேர்ந்த அவர் தொல்காப்பியத்தின் முதல் சூத்திரத்திற்கு விரிவான ஆராய்ச்சி நூல் எழுதினார். அவருடைய காஞ்சிப் புராணம்( காஞ்சி புரத்தைப் பற்றியது) தலபுராணங்களுள் தனிச் சிறப்போடு இலக்கிய நயம் மிகுந்து விளங்குகிறது. திருக்குறளின் அடிகளை அமைத்து வெண்பாக்களால் அவர் இயற்றிய நீதி நூல் சோமேசர் முதுமொழி வெண்பா. அந்நூலில் திருக்குறள் நீதிகளுக்குப் பொருத்தமான எடுத்துக்காட்டாகக் கதைகளையும் பல வரலாற்று நிகழ்ச்சிகளையும் அமைத்துப் பாடியுள்ளார். சைவ சித்தாந்த சமயத்திற்கு அடிப்படை நூலாகிய சிவஞானபோதத்துக்கு மாபடியம் (மகாபாஷ்யம்) என்ற விரிவுரையும் ஒருசிற்றுரையும் வேறு சிலசமய நூல் விளக்கங்களும் எழுதியுள்ளார்.

வடமொழியிலும் தருக்கத்திலும் இலக்கணத்திலும் அவர் பெற்றிருந்தபுலைமையை அவருடைய உரைநூல்கள் காட்டும். இலக்கண விளக்கம் என்ற நூலுக்கு இலக்கண விளக்க சூறாவளி என்ற மறுப்பு சிவஞான சித்தியாரின் ஓர் உரையில் ஒருபகுதிக்கு வைரக்குப்பாயம் என்ற பெயரால் மறுப்பு என்று இவ்வாறு புலவர்கள் அஞ்சத்தக்க வகையில் மறுப்பு நூல்கள் எழுதியவர் அவர்.வடமொழி நூல்கள் சிலவற்றை தமிழில் மொழி பெயர்த்துள்ளார். அவர் இயற்றிய சிறு நூல்களுள் புகழ்பெற்றவை அமுதாம் பிக்கை பிள்ளைத்தமிழ், செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் என்னும் இரண்டு பிள்ளைத் தமிழ் நூல்களாகும். சில கோயில் தலங்களைப்புகழ்ந்து சிறுநூல்கள் இயற்றியுள் ளார்.

சிவஞான சுவாமிகளின் மாணவராகிய கச்சியப்ப முனிவர் தணிகைப் புராணம் என்னும் சுவைமிகுந்த தலபுராணத்தை எழுதினார். அது திருத்தணி என்னும் தலத்தைப் புகழ்ந்து முருகக் கடவுளின் பெருமையை விளக்குவது. அவர் காலத்தில் பலர் சீவக சிந்தாமணி என்னும் சைவக் காப்பியத்தைப் படித்து அதன் சுவையைப் பாராட்டித் திரிவதைக் கேட்டு வேறு சமய நூலைப் போற்றுவதை விட்டுச் சைவசமய நூலில் ஈடுபட வேண்டும் என்று ஆசைகொண்டு இதை இயற்றினாராம்.

அதனால் சீவகசிந்தாமணி போலவே பல வகைச் சுவைகளும் நிரம்பிய இலக்கியமான அதைப் படைத்தார். அவருடைய மாணவர் கந்தப்பையர் பேரூர்ப் புராணம், விநாயக புராணம், பூவாளூர்ப் புராணம், கச்சி ஆனந்த ருத்திரேசர் வண்டுவிடு தூது, திருத்தணிகை ஆற்றுப்படை முதலான பலவகை நூல்களையும் இயற்றினார்.

தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் என் பவரும் சிவஞான முனிவரின் மாணவர் . திருத் தணித் திருவிருத்தம், துறைசைக் கோவை , கலசைக்கோவை ,சிதம்பரரேசர் வண்ணம் முதலியன அவர் நூல்கள் அவர் காலத்து மடத்துத் தலைவர்களின் மேலும் நூல்கள் இயற்றினார். அவை திருச்சிற்றம்பல தேசிகர் சிந்து, அம்பலவாணதேசிகர் ஆனந்தக்களிப்பு முதலியன நாட்டுப் பாடல் வடிவங்களை அவற்றில் கையாண்டார்.

**சாந்தலிங்க சுவாமிகள்**

பதினெட்டாம் நூற்றாண்டில் சென்னையை அடுத்த திருப்போரூரில் ஒரு மடத்தை ஏற்படுத்திய புலவர் சாந்தலிங்கசுவாமிகள். அவர் வீரசைவ சமயத்தைச் சார்ந்த துறவி. வைராச்சிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார், கொலை மறுத்தல் , நெஞ்சு விடுதூது முதலிய சுவையான சமய நூல்களை இயற்றினார். அவர்க்குப் பின்வந்த சிதம்பர சுவாமிகள் இயற்றிய நூல்களும் சிறப்புக்கு உரியவை. அவற்றுள் திருப்போரூர் சந்நிதி என்னும் தொகுப்பு உருக்கமான பக்திப் பாடல்கள் அடங்கியது.

**சிதம்பர சுவாமிகள்**

பிற்காலத்தில் துறவறத்தாராய் விளங்கிப் பக்தி இலக்கியம் படைத்தவர்களுள் அந்தச் சிதம்பர சுவாமிகள் குறிப்பிடத்தக்கவர். மீனாட்சியம்மை மீது நீண்ட ஒரு பாடலும் நெஞ்சு விடு தூது என்ற நூலும் வேறு சில பாடல்களும் இயற்றியவர்: திருப்போரூர் என்னும் தலத்தில் உள்ள முருகன்மேல் பிள்ளைத்தமிழும் தாலாட்டும் திருப்பள்ளியெழுச்சியும் குயில்பத்தும் அடைக்கலப்பத்தும் திருவாசகத்தைப் பின்பற்றி பாடியவை; திருவாசகம் போலவே பாடல்கள் உருக்கமாக உள்ளன. திருப் பள்ளி எழுச்சிப் பாடலும் திருவாசகத்தில் உள்ள வாறே அமைந்தது. பாடல்களின் நடை தடையற்ற ஓட்டம் உடையது; பக்திச் சுவைக்கு ஏற்ற நெகிழ்ச்சி வாய்ந்தது.

**தத்துவராயர்**

இலக்கிய வடிவங்களையும் நாட்டுப்பாடல் வடிவங்களையும் பயன்படுத்தித் தத்துவக் கருத்தகள் அமைந்த பல பாடல்களைப் பாடியவர் தத்துவராயர் என்பவர். அவர் போல் வேறு யாரும் அத்தனை வடிவங்களைப் பயன் படுத்தியவர்கள் இல்லை எனலாம். உலா , தூது, கலம்பகம், பரணி ,அந்தாதி முதலான பலவும் பாடியுள்ளார். அஞ்ஞவதைப் பரணியும் மோகவதைப் பரணியும் அவர் பாடிய பரணி நூல்கள். அவற்றில் அரசர்களின் போர்க் களங்கள் இல்லை. ஞானிகளின் போர்கள் உள்ளன. அஞ்ஞானமும் மோகமும் ஞானத்தால் வெல்லப்பட்டனவாக ஆன்மிகப் போர்கள் பாடப்பட்டுள்ளன. சில பாடல்கள் திருவாசகத்தைப் பின்பற்றிப் பாடியிருக்கிறார்.



பக்தி உணர்ச்சிக்கு முதன்மை இல்லாமல் தத்துவக் கருத்துக்களை விளக்கிப் பாடியதால் திருவாசகம் போல் பாடல்கள் இலக்கிய சிறப்புபெற முடியவில்லை. திருவாசகத்தில் உள்ளது போல் இவரும் "குயிலே ! இறைவனை நீ வரக்கூவாய்" என்று குயிலை விழித்துப் பாடியுள்ளார்.திருவாசகத்தில் உள்ள அன்னைப்பத்துப்போலவே இவரும், "அன்னே என்னும்" என்று முடியும் பாடல்கள் இயற்றியுள்ளார். (தொடரும்)

## இன்னும் இரண்டு வாரகாலப்பகுதியில் ஜே.வி.பி,ஐ.தே.க.கூட்டணி கலைந்துவிடும்

### மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

இன்னும் இரண்டு வார காலப்பகுதியில் ஜே.வி.பி. மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி கூட்டணி கலைந்து விடுமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி. ஆகிய கட்சிகளுக்குள் கடுமையான உட்கட்சி பூசல்கள் நிலவி வருவதாகவும் தற்போது அரசுடன் எஸ்.பி திஸாநாயக்க இணைந்து கொண்டதனைப் போன்று வேறும் பல ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் இணைந்து கொள்ளஉள்ளதாகவும்அவர்தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜே.ஆர், பிரேமதாஸ, டி.பி, சந்திரிக்கா மற்றும்ரணில்ஆகியோருக்குமுடியாதகாரியத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சாதித்து காட்டியதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6-2)

## இலங்கை அரசுடனான உறவின் மூலம் தென்னாபிரிக்காவின் இரட்டைவேடம் புரிகிறது

### அந்நாட்டு மனித உரிமை அமைப்புகள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை அரசோடு நெருக்கமான உறவு கொள்வது குறித்துப் பேசும் தென்ஆபிரிக்க அரசு மனிதாபிமான பிரச்சினைகளில் இரட்டை வேடம் போடுகிறது என்று அந்நாட்டு மனித உரிமை அமைப்புகள் குற்றம் சுமத்தியுள்ளன.

இலங்கைக்கு பயணம் மேற்கொண்ட தென் ஆபிரிக்க அமைச்சர் நிகோனா மாஷாபேன் மனித உரிமைகள், வறுமை ஒழிப்பு, உலகமயமாதல், ஐ.நா. சீர்திருத்தம் ஆகிய வற்றில் தென் ஆபிரிக்காவின் முக்கிய கூட்டாளியாக இலங்கை உள்ளது என்று கூறியிருந்தார்.

அது மட்டுமன்றி மனித உரிமைகளை மேம்படுத்துவதில் ஒத்த கருத்துடைய நாடுகள் ஒன்றிணைந்து பணியாற்றிட வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

தென் ஆபிரிக்கா அமைச்சர் மாஷாபேன் இவ்வாறு கூறியதற்கு தென் ஆபிரிக்காவில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது.

தமிழர்களை இலங்கைப்படையினர் படுகொலை செய்ததை மறந்துவிட்டு அந் நாட்டுடன் தென்ஆபிரிக்கா அரசு உறவுகொள்ள முயற்சிக்கிறது என்று குற்றஞ்சாட்டிய இண்டாபா சமூக இயனகத்தின் ராய் ஷெட்டி இலங்கையில் தமிழ் மக்கள் ஒடுக்குதலிற்கு ஆளாக்கப்பட்டதை மறைத்துவிட்டு அந்நாட்டு அரசுடன் உறவு கொள்ள முயற்சிப்பது தங்களை கோபப் படுத்தியுள்ளது என்று கூறியுள்ளார். (2-6)

## மாநாடொன்றில் கலந்துகொள்ள சம்பந்தன் வியன்னாவுக்கு விஜயம்.

### -திவயின தகவல்-

(கொழும்பு)

மாநாடொன்றில் கலந்து கொள்ளும் நோக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சம்பந்தன் வியன்னா விஜயம் செய்துள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஒஸ்ட்ரியாவின் தலைநகர் வியன்னாவில் நடைபெறவுள்ள இரகசிய மாநாடு ஒன்றில் கலந்து கொள்ளும் நோக்கில் அவர் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

அமெரிக்காவில் புலிகளின் செயற்பாட்டாளர் உருத்திரகுமாரனின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள மாநாட்டிலேயே அவர் கலந்து கொள்ளவுள்ளதாக அது குறிப்பிட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிரான தமிழ் கட்சிகளே இந்த விடயத்தை அம்பலப்படுத்தியுள்ளதாகத் திவயின சுட்டிக்காட்டியுள்ளது. (ஓ-6-2)

## அரச சார்பற்ற நிறுவனங்களை அகற்றியமையே யுத்தத்தை வெற்றிகரமாக்க உதவியது

### அமைச்சர் மஹிந்த சமரசிங்க

அரச சார்பற்ற நிறுவனங்களை அகற்றியதன் மூலம் யுத்தத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க முடிந்ததாக மனித உரிமை கள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் காணப்பட்ட பிரதேசங்களில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரசன்னம் காணப் பட்டிருந்தால் யுத்தத்தை முன்னெடுப்பதில் பல்வேறு சிக்கல் நிலை ஏற்பட்டிருக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய வெற்றிகரமாக அரச சார்பற்ற நிறு வனங்களை தாம் வெளி யேற்றியதாகவும் அவர்கள் தமிழீழவிடுதலைப் புலிகளுக்கு வழங்கிய ஆதரவு மற்றும்வழங்கியவாகனங்கள் தொடர்பான புள்ளி விபரங்கள் தம்மிடம் காணப் படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். 30 ஆண்டு கால யுத்தத்தை நிறைவு செய்த காரணத்தினால் நாடு பல்வேறு சவால்களை எதிர்நோக்கி வருவதாகவும் அவற்றை தமது அரசாங்கம் வெற்றிகரமாக முறியடிக்கும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (6-2)

# குருப்பெயர்ச்சி பலன்கள்

## 15-12-2009 முதல் 21-11-2010 வரை

(மகம், பூரம், உத்தரம் - முதலாம் பாதம் வரை)

**செல்லும் இடங்களிலெல்லாம் செல்வாக்கு பெற்ற சிம்ம ராசி நேயர்களே!**

ஏழரைச் சனியின் பிடியில் சிக்கித் தவிக்கும் நீங்கள் எப்பொழுது இந்த குருப் பெயர்ச்சி வரப்போகிறது? இனியாவது குரு பார்த்து குறைகளைத் தீர்ப்பாரா? என்று எண்ணிய உங்களுக்கு இப்போது நல்ல காலம் பிறப்பதற்கான அறிகுறிகள் தோன்ற ஆரம்பிக்கும் நேரமிது.

எனவே, கார்த்திகைக்கு மேல் கை நிறைய பொருள் குவிக்கப் போகிறீர்கள். கம்பெனிகளும், கடைகளும் வைத்திருப்போர் கிளைத் தொழில்கள் தொடங்குவர். கை நீட்டி சம்பளம் வாங்குவோர் பதவி உயர்வு காண்பர்.

யோக பலம் பெற்ற நாளில் குரு வழி பாட்டை மேற்கொண்டால் தேக நலனும் சீராகும். செல்வாக்கும் அதிகரிக்கும். அஷ்டமத்தில் குரு அடியெடுத்து வைக்கும் பொழுது தான் அதிக கவனத்தை நீங்கள் ஒவ்வொரு காரியத்திலும் செலுத்த வேண்டும். வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவங்களையெல்லாம் வழங்கப் போவது இந்த குருப்பெயர்ச்சி தான்.

காரணம், குருவின் நேரடிப் பார்வை உங்கள் ராசியில் பதிகிறது. உங்கள் ராசிக்கு 5,8 க்கு அதிபதியான குரு ஏழாமிடத்தில் சஞ்சரித்து உங்கள் ராசியையும், மூன்று, பதினொன்று ஆகிய இடங்களையும் பார்க்கப் போகிறார். சில மாதங்கள் கழித்து அதிச்சாரமாக மீனத்திற்கு செல்லும் பொழுது அங்கிருந்து 2,4,12 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகிறார்.

அமைச்சர்கள், அதிகாரிகள் ஊருக்கு வரும் பொழுது நாம் எப்படி வரவேற்கிறோமோ, அதைப் போல 'நல்லவன்' குரு நம்மை நாடி வரும் பொழுது நம்மைப் பார்க்க வரும் பொழுது, நாமும் வரவேற்று வழிபாடு செய்ய வேண்டும்.

பூசம் நட்சத்திரமும், உங்கள் ராசிநாதன் சூரியனுக்குரிய தினமான ஞாயிற்றுக்கிழமையில் நடைபெறும் குரு வழிபாட்டிலும், ஹோமங்களிலும் கலந்து கொள்வதன் மூலமும், அன்னதான வைபவங்களை நடத்துவதன் மூலமும் ஆச்சரியப்படத்தக்க பலன்களை நீங்கள் காணலாம்.

**புகழ் ஏணியின் உச்சியில் இருப்பவர்கள் நீங்கள்!**

பகைவர்களைக் கூட உங்கள் வெற்றிக்கு படிக்கட்டுகளாக மாற்றிக் கொள்வீர்கள். உங்கள் கொள்கைகளை யாருக்காகவும், எதற்காகவும் விட்டுக் கொடுக்க மாட்டீர்கள். அடுத்தவர் நலனுக்காக எடுத்த காரியங்களை உடனுக்குடன் முடித்துக் கொடுப்பீர்கள்.

மாற்று கருத்துடையோரும் மனம் மாறும் விதத்தில் மதம், இனம் என்று பார்க்காமல் உதவி செய்வீர்கள். சுதந்திரப் பறவையாக இருக்க பிரியப்படுவீர்கள். தவறு செய்தால் தட்டிக் கேட்கவும் தயங்க மாட்டீர்கள்.

உங்கள் ராசிநாதன் சூரியன் "ராஜ கிரகம்" என்றழைக்கப்படுகிறார். அனைவருக்கும் சூரியனைத் தெரியும்.

அதேபோல உங்களைத் தெரியாதவர்கள் உங்கள் பகுதியிலேயே யாரும் இருக்க முடியாது. சுய தொழிலால் இலாபம் குவிப்பவர்களும் நீங்கள்தான்.

குருப்பெயர்ச்சியானவுடன் அதாவது, 15.12.2009 முதல் 4.5.2010 வரை மீண்டும் 8.11.2010 முதல் 21.11.2010 வரை கும்பத்தில் குரு சஞ்சரிக்கப் போகிறார். அப்பொழுது அதன் பார்வை, ஜென்ம ராசியிலும், மூன்று, பதினொன்று ஆகிய இடங்களிலும் பதிவதால் உடல் நலம், சகோதரம், வெற்றி, இலாபம் ஆகியவற்றை குறிக்கும் இடங்கள் எல்லாம் புனிதமடைகின்றன.

இடையில் அதிச்சாரமாக 5.5.2010 முதல் 7.11.2010 வரை மீன ராசியில் சஞ்சரித்து அங்கேயே வக்ரம் அடைந்தும் சில நாட்கள் சஞ்சரிக்கிறார். வக்ர காலத்தில் வளர்ச்சி ஏற்பட சுய ஜாதக ரீதியாக ஆராய்ந்து முறையாக தெய்வ வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது.

மீன ராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை வாக்கு, தனம், குடும்பம், தாய், சுகம், வாகனம், பயணம், விரயம் ஆகிய வற்றை குறிக்கும் இடங்களில் பதிவதால் அந்த இடங்கள் எல்லாம் புனிதமடைகின்றன. அவைகளுக்கெல்லாம் நல்ல பலன்களை வரவழைத்துக் கொடுக்கும் குரு, தற்சமயம் ஏழில் சஞ்சரிக்கப் போகிறார்.

*"ஏழில் குரு வந்தால் எதிர்காலம் சிறப்படையும்! வாழ்வில் வசந்தம் வரும்! வருமானம் பெருகி விடும்! சூழும் பகை விலகும்! சுற்றமெல்லாம் பாராட்டும்! கோள்கள் குறுக்கிட்டால் குரு பார்வை தவிர்த்து விடும்!"*

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, ஏழாமிடத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது இயல்பான வாழ்க்கையில் இனிய மாற்றங்கள் அதிகரிக்கின்றது. எதிர்காலம் சிறப்படைய தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். மங்கல நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெறும். மண மாலை சூடுவதற்கான வாய்ப்புகளும் உருவாகும். தங்கு, தடையின்றி தனவரவு வந்து கொண்டேயிருக்கும். பொது வாழ்வில் புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும்.

**விருப்பங்களை நிறைவேற்றும் வியாழனின் பார்வை!**

குருவின் பார்வை ஜென்ம ராசியில் பதிவதால் உடல் ஆரோக்கியம் சீராகும். மருத்துவச் செலவுகள் குறையும். உற்சாகத்தோடு பணிபுரிய தொடங்குவீர்கள். கடந்த சில மாதங்களாக ஏற்பட்ட கவலைகள் ஓடி ஒளியும்.

இழந்த சில வாய்ப்புகளை மீண்டும் பெறுவீர்கள். இடம் மாறுவோமா? என்ற சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள். தேங்கிக் கிடந்த காரியங்கள் இனி தூங்கிய நிலை மாறி தொடக்க விழா காணும் சூழ் நிலை உருவாகும்.

குருவின் பார்வை சகோதர ஸ்தானத்தில் பதிவதால் சகோதரர்கள் உங்கள் சொல் கேட்டு நடக்க முன்வருவர். இதுவரை நீங்கள் எதைச் சொன்னாலும், மாற்றுக் கருத்துச் சொல்லிய உடன் பிறப்புகள் இப்பொழுது நீங்கள் சொல்லிய காரியங்களை உடனுக்குடன் செய்து முடிப்பது கண்டு ஆச்சரியப்படுவீர்கள்.

அண்ணன், தம்பிகளின் ஒற்றுமையைக் கண்டு அருகில் இருப்பவர்களே ஆச்சரியப் படுவர். முன்னோர் சொத்துக்களைப் பிரித்துக் கொள்வதில் இதுவரை இருந்த தடைகள் அகலும்.

குருவின் பார்வை உங்கள் ராசிக்கு பதினோராமிடத்தில் பதிவதால், சொந்த தொழில் செய்து சுகம் காண முடியவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு, தொழில் செய்ய நாங்கள் பணம் தருகிறோம் என்று நண்பர்கள் சொல்வார்கள். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். அடுத்த படிச் சாமான்கள் முதல் அதிக விலை உயர்ந்த சாமான்கள் வரை அடுக்கடுக்காக வந்து சேரும்.

உத்தியோகத்தர்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்றவைகள் வந்து சேரலாம். தங்கம், வெள்ளி தாராளமாக வந்து உங்கள் உடலை மெருகூட்டும்.

சுய ஜாதகத்தில் குரு இருக்கும் பாத சார பலமறிந்து பரிகாரங்களை மேற்கொண்டால் பதவி வாய்ப்புகளும் வந்து சேரும். பண வரவும் திருப்தி தரும்.

**மீன குரு பார்வையால் ஏற்படும் பலன்கள்!**

உங்கள் ராசிக்கு எட்டாமிடத்தில் சஞ்சரிக்கப் போகும் குரு அதன் பார்வை பலத்தால், குடும்பத்தில் குதூகலத்தையும், சுய விரயத்தையும் உருவாக்கப் போகிறார். மே 5 முதல் நவம்பர் 7 வரை தேவைக்கேற்ற பணம் வந்து சேரும்.

தெய்வீகப் பயணங்கள் அதிகரிக்கும். காவல் துறையால் ஏற்பட்ட கலக்கங்கள் அகலும். கடன் கேட்ட இடத்தில் கிடைக்கும். எனவே, திறமைமிக்கவர்களை பகைத்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது.

குருவின் பார்வை சுக ஸ்தானத்தில் பதிந்தாலும், அது அஷ்டமத்தில் சஞ்சரிப்பதால் மருத்துவச் செலவுகள் ஓரளவு ஏற்படும். ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல் ஏற்படாமலிக்க ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவது நல்லது.

வாகன மாற்றம் செய்ய உகந்த நேரமிது. வளர்ச்சி கூட, விரயங்கள் குறைய, பகை அணுகாமல் இருக்க மேதா தெட்சணாமூர்த்தியை வழிபடுவது நல்லது. பயணங்கள் அதிகரிக்கும். இடமாற்றங்கள் உருவாகலாம். தம்பதிகளுக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற் படாமலிருக்க விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!**

**(16.7.2010 முதல் 7.11.2010 வரை)**

உங்கள் ராசிக்கு 5,8 க்கு அதிபதியான குரு பகவான் வக்ரம் பெறும் பொழுது வளர்ச்சியும், தளர்ச்சியும் மாறி மாறி வரும். 5க்கு அதிபதி வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல.

அதே நேரத்தில் 8க்கு அதிபதி வக்ரம் பெறுவதால் கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம் என்பதற்கிணங்க சில நல்ல பலன்களும் உங்களுக்கு வந்து சேரலாம்.

திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள்.

இந்த குருப் பெயர்ச்சியால் சிம்ம ராசியில் பிறந்த பெண்களுக்கு செல்வாக்கு மேலோங்கும். இதுவரை சிக்கனத்தைக் கையாண்ட நீங்கள் இனி செலவழிக்க அஞ்சமாட்டீர்கள்.

**ஜோதிடக் கலைமணி சிவல்புரி சிங்காரம்**

பொது வாழ்வில் புதிய பொறுப்புகள் வந்து சேரும்.

வக்ர காலத்தில் சுய ஜாதக ரீதியாக குருவின் சாரபலமறிந்து பரிகாரங்களைச் செய்தால் மக்கள் போற்றும் வாழ்வமையும். அசையாத சொத்துக்களை வாங்கிச் சேர்க்கும் நேரமிது. குடும்பத்தில் உங்கள் சொல்லுக்கு முக்கியத்துவம் கொடுப்பர்.

சப்தம குருவால் சகல யோகங்களும் காண, வைரவர், வளரொளிநாதர், வடிவுடையம்மனை வழிபடுவதுடன், தெட்சிணா மூர்த்தியையும் வழிபட்டு வாருங்கள். (தொடரும்)

# மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றியின் மூலம்தான் தமிழ் மக்கள் பிரச்சினைக்கு தீர்வு வரும்

## சிங்கள ஊடகத்திற்கு தங்கேஸ்வரி செவ்வி

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வெற்றியீட்டினால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு எளிதில் தீர்வு காண முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே. தங்கேஸ்வரி தெரிவித்துள்ளார். தற்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆரம்பித்துள்ள அபிவிருத்தித் திட்டங்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டால் அதனால் தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்ப்பதில் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுவதுடன் பிரச்சினைகளை தீர்ப்பதில் சிக்கல்களும் எழக்கூடும்.

அத்தோடு தமிழ் தேசியக் கூட்டமைப்பில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் குறித்து பல கருத்துக்கள் நிலவிய போதிலும் இதுவரை இறுதி தீர்மானங்கள் எடுக்கப்படவில்லை. எவ்வாறாயினும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்கள் எவரையும் களத்தில் இறக்காது எனவும் தங்கேஸ்வரி மேலும் குறிப்பிட்டுள்ளார். சிங்கள தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார். (6-2)

# இளைஞனைக் கொன்ற இருவருக்கு மரண தண்டனை கிடைத்தது

(கொழும்பு)

நொச்சியாகம பகுதியில் இளைஞர் ஒருவரைக் கொலை செய்த குற்றத்தின் பேரில் இருவருக்கு அநுராதபுரம் மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

இது தொடர்பான வழக்கு வடமத்திய மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி மேனகா விஜேசுந்தர முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

நொச்சியாகம பகுதியில் வசித்து வந்த இளைஞர் ஒருவரை 1998 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த காலப்பகுதியில் மண்வெட்டியால் தாக்கிக் கொலை செய்ததாக இந்த இருவர் மீதும் சட்டமா அதிபரால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது. குற்றஞ்சாட்டப் பட்ட இந்த நபர்களின் குற்றம் சந்தேகத்துக் கிடமின்றி நிரூபணமாகியுள்ளதாக மேல்நீதி மன்ற நீதிபதி தெரிவித்து இருவருக்கும் மரண தண்டனை விதித்தார். (6-2)

# இலங்கை அகதி தற்கொலை

(சென்னை)

தமிழகத்தின் கடலூரில் உள்ள காட்டு மன்னார் கோயில் அகதி முகாமில் வசித்து வந்த இலங்கை அகதி ஒருவர் தற்கொலை செய்து கொண்டார்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமையன்று இடம்பெற்றுள்ளது. சௌந்தரராஜன் என்ற இவர் பல வருடங்களாக வயிற்றுவலியால் அவதியுற்று வந்ததாக பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (6-2)

# பிறந்த எண் பலன்களும் அதிர்ஷ்ட பெயர்களும்

## உடல் எண் : 5 விதி எண் : 9

**உடலமைப்பு**

பிறந்த எண் 5, விதி எண் 9 ஆகக் கொண்டவர்கள் புதன், செவ்வாய் ஆகிய வர்களின் கூட்டு ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள். இவர்கள் கம்பீரத் தோற்றமுள்ளவராய் இருப்பர். பிறர் இவர்களைக் கண்டு அஞ்சும் நிலை இருக்கும். அந்த அளவுக்கு உடல் பலமும் கொண்டவர்களாக இருப்பர்.

**மன, குணவியல்பு**

மன உறுதி மிக்கவர்கள். எதற்கும் அஞ்ச மாட்டார்கள். உயிருக்கு ஆபத்து விளைவிக் கும் செயல்களைக் கூட செய்யும் ஆற்றல் பெற்றவர்கள். தாம் நினைத்ததை எந்த வகையிலாவது முடிக்க வேண்டுமென்ற துணிச்சல் மிக்கவர்கள்.

தன்னால் முடியாத காரியம் எதுவுமி ல்லை என்று பொறுமையாகக் கூறிக் கொள் வர். அதனால் பலரும் இவர்களின் உதவியை நாடிச் செல்வர். பிறருக்கு உதவும் தாராள மனம் கொண்டவர்களாக இருப்பர். இதனால் புகழும் பெறுவர்.

இவர்கள் பொது நலசேவை புரிபவராக இருந்தாலும் பிறருக்கு அறியாத வகையில் தமக்கு ஆதாயத்தைத் தேடிக் கொள்பவர்க ளாக இருப்பர். எந்த வழியிலாவது வருமா னம் வருவதற்கான வழியை வகுத்து கொள் வர்.

இவர்கள் எப்போதும் சுறுசுறுப்புடன் செயல்பட்டுக் கொண்டிருந்தாலும், சில நேரங்களில் சோர்ந்து விடுவதுமுண்டு.

தனக்குரிய கஷ்ட நஷ்டங்களைப் பிறரி டம் கூறமாட்டார்கள். தம்முள்ளேயே நினைத்து தமக்குத்தாமே ஆறுதல்படுத்திக் கொள்ள வல்லவர்கள். அத்துடன் தம் முன்னேற்றப் பணியைத் தொடர்ந்திடுவர்.

தம்மை நம்பியவர்களையும் தம்மை சார்ந்தவர்களையும் நல்வழிப்படுத்திச் செல் லக்கூடியவர்கள். அத்துடன் இவர்கள் பிறரு டைய பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முன்வருவர். அதனால் பிறரின் உள் விவகாரங்களில் அதிகம் தலையிட நேரும். அச்சமயம் இவர்களின் பிறரின் வெறுப்புக்கு ஆளாக நேரும்.

**குடும்ப வாழ்க்கை**

இவர்கள் வாழ்க்கைப் போராட்டம் நிறைந் ததாக இருந்தாலும் வாழ்க்கைத் தரத்தில் குறைவு ஏற்படாது. உயர்ந்து கொண்டே வருவர். மற்றவர் பெருமைப்படக்கூடிய அளவுக்கு குடும்பத்தை நடத்துவர்.

இவர்களுக்கு ஆரம்பத்தைவிட பிற்கால வாழ்க்கை வசதி நிறைந்ததாக இருக்கும்.

**தொழிலும் வருமானமும்**

இவர்கள் கலைத்துறையில் இசை, சங்கீதம், நாட்டியம் போன்றவற்றில் நாட்ட முள்ளவர்களாக இருப்பர். சட்டம் மற்றும் தொழில் நுட்பத்தில் தேர்ச்சி பெற்றவர்களாக வும் இருப்பர். அதனால் கைத்தொழில்களி லும், வழக்கறிஞர், நீதிபதியாக இருக்கக் கூடும். மத்தியஸ்தம் செய்து வைப்பதில் கைதேர்ந்தவராக இருப்பர்.

இவை தவிர இரும்பு மற்றும் உலோகம் சம்பந்தத் தொழில்கள் புரிபவர்களாகவும் அது தொடர்பான தொழில்களில் கமிஷன் ஏஜெண்டுகளாகவும் இருப்பர். பிறரை மகிழ்விக்கும் தொழில்களிலும் இவர்கள் சிறப்படைவர்.

இவர்கள் படிப்படியாக முன்னேறுவர். தம் சொந்தத் தொழிலில் அதிக வருமானமும், சொத்துச் சேர்க்கையும் பெறக்கூடும்.

**ஆரோக்கிய நிலை**

இவர்கள் உஷ்ண சம்பந்த மூலநோய், இரத்தக் கொதிப்பு போன்ற நோய்களுக்கு ஆளாக நேரும். இவை தவிர இருதயநோய், மூட்டுவலி, முதுகுவலி போன்றனவும் வர வாய்ப்புண்டு.

**சாதக பாதக எண்களும் திகதியும்**

இவர்களுக்கு புதன், செவ்வாய் ஆதிக்கத் திற்குட்பட்ட 5,9 ஆகியவற்றில் யோகப்பலன் தரும் எண்களுக்கு பெயரை மாற்றி அமைத் துக் கொள்ள யோகமாகும்.

தம் நிறுவனங்களுக்கும் 5,9 தொடர்பு டைய எண்களுக்கு பெயர் அமைப்பதே அதிர்ஷ்டமாகும்.

இவர்களுக்கு 5,9 உடன்யோகம் தரும் எண்களும் அது தொடர்புடைய திகதிகளும் யோகமானவை.

ஆனால் சந்திரன், கேது ஆதிக்கத்திற்குட் பட்ட 2,7 இது தொடர்புடைய எண்களும், திகதிகளும் யோகமற்றவை.

பிறந்த எண் 5 ஆகக் கொண்டவர்கள் தங்கள் எண்ணிலேயே பெயர் அமைத்துக் கொள்வது சிறப்பாகும். இவர்களுக்கு மேன் மையை அளிக்கும்.

சூரியனின் ஆதிக்கத்திற்குட்பட்ட ஒன்று தொடர்புடைய எண்களை விதி எண் 1,4 ஆகக் கொண்டவர்கள் உபயோகித்துக் கொள்ள லாம். இவர்களுக்கு இந்த இரு எண்களில் பெயர் அமைப்பு யோக பலன்களைத் தரவல்லதாக இருக்கும். ஒன்று தொடர்புடைய 28 என்ற எண்ணைத் தவிர்க்க வேண்டும் என்பதை கவனிக்க வேண்டும்.

**பெயர் அமைக்க கவனிக்க வேண்டியவை**

இதுவரை பிறந்த எண் 5 க்கு விதி எண் 1 முதல் 9 வரையிலான பலன்களைக் கண் டோம். பிறந்த எண்ணுக்கு விதி எண் நட்பாக இருக்குமானால் இதுவரை கூறப்பட்ட பலன் கள் நடக்கும். பகையாக இருக்குமானால் பலன்களிலும் நிச்சயமற்ற தன்மை காணப் படும்.

அந்த நிலையில் தான் இரண்டு எண்க ளுக்குப் பொருத்தமான யோகப்பலன் தரும் எண்களுக்கு அமைத்துக் கொள்வதால் நற் பலன்களைப் பெறக்கூடும்.

இரண்டு எண்களும் ஒன்றுக்கொன்று பகையாக இருக்கும் நிலையில் இவர்களுக்கு நல்ல பலனளிக்கும் எண்கள், திகதியையும் பாதக பலனளிக்கும் எண்கள் திகதியையும் வரையறுத்துக் கூறமுடியாத இக்கட்டான நிலை ஏற்படவும் கூடும்.

அந்த சந்தர்ப்பங்களில் அவர்களின் நடைமுறை வாழ்க்கையில் அதுவரை நடந்த நல்ல நிகழ்ச்சிகள் கெட்ட நிகழ்ச்சிகளைக் குறித்து அதில் நல்லது நடந்த எண்கள் (பாஸ் செய்த சர்டிபிகேட் எண், அப்பாயிண்ட் மெண்ட் ஆர்டர் எண், திருமண நாள் போன் றன) மற்றும் திகதியை நல்ல பலனளிக்க வல்லவை என்றும், அதைப் போன்று தீய நிகழ்ச்சி நடந்த எண்களும் திகதியும் யோக மற்றவை என்றும் நிச்சயிக்கலாம்.

இதுவரை கூறப்பட்ட மன, குணவியல்பு, குடும்ப வாழ்க்கை போன்றவற்றில் தீயதாக இருப்பின், பிறவி எண், விதி எண்ணுக்குப் பொருந்தும் பெயர் அமைத்துக் கொள்ள அதனால் ஏற்படும் கொடிய பலன் தவிர்க் கப்படும்.

ஒவ்வோர் எண்ணுக்குரியவருக்கும் கூறப் பட்டுள்ளவை அவர்களுக்குப் பொருந்தக் கூடிய தொழில்கள், அவர்களுக்கு பெயர் எண், பிறவி மற்றும் விதி எண்ணுக்குப் பொருத்தமாக யோகமுள்ளதாக இருப்பின் தொழிலில் முன்னேற்றமும், பொருளாதாரத் தில் செழிப்பும் பெறலாம்.

ஒரு சிலர் தமக்குப் பொருந்தாத தொழி லில் ஈடுபட்டிருப்பாரேயானால் அவர்கள் பொருந்தும் தொழிலுக்கு தம்மை திருப்பிக் கொண்டு முன்னேறலாம்.

ஆரோக்கியக்கேடு இயல்பாக ஏற்படக் கூடியதே. தம் பெயரை பொருத்தமுள்ளதாக அதிர்ஷ்டமாக அமைத்துக் கொண்டால் நோய் ஏற்பட்டால் அதனால் பெருமளவு பாதிப்பின்றித் தவிர்க்கப்படலாம்.

**இனி பெயரை அமைத்துக் கொள்வ தில் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சங் களை ஆராய்வோம்.**

பிறந்த எண் 5 ஆகவும் விதி எண் 4,6, 7,8 ஆகக் கொண்டவர்கள் சுக்கிரன் ஆதிக் கத்திற்குட்பட்ட ஆதார எண் வருமாறு யோகப் பலன் அளிக்கவல்ல விஸ்தார எண்ணுக்கு தம் பெயரையும் தம் நிறுவனத்தின் பெயரை யும் அமைத்துக் கொள்ளலாம்.

விதி எண் 5,9 க்காரர்கள் செவ்வாய் ஆதிக்கத்திற்குட்பட்ட 9 இல் கூட தம் பெயரை அமைத்துக் கொள்ள யோகமாகும். ஆனால் மற்றவர்கள் 9 எண்ணை அமைத்துக் கொண் டால் சோதனையாகிவிடும்.

விதி எண் 1,6,5,8 ஆகக் கொண்டவர்கள் விடயத்தில் சில பிரத்யேகத் தன்மை உள்ளது. இவர்களுக்கு 5ஐத் தவிர வேறு எந்த எண் ணும் பொருந்தும் அல்லது பொருந்தாது போக லாம். இவர்களுக்கு அனுபவம் வாயிலாக அது பொருந்துகிறது என்பதைக் கவனித்து அதில் பெயரை அமைத்துக் கொள்வது சிறப்பாகும்.

சனியின் ஆதிக்கத்திற்குட்பட்ட 8 ஐ ஆதார எண் கொண்டவை பெரும்பாலும் யாருக்கும் பொருந்துவதில்லை. ஆனால் 5 எண்காரர் கள் சிலருக்கு பொருந்தலாம். அப்படிப் பொருந் தும் எனில் 53,62 போன்ற எண்களில் மட்டும் பெயர் அமைத்துக் கொள்ள யோக மாக இருக்கும். இருப்பினும் இந்த எண்க ளைத் தவிர்க்கவே முயல வேண்டும்.

இவர்கள் புதனின் ஆதிக்கத்திற்குட்பட்ட 5 தொடர்பான எண்களில் அமைத்துக் கொள் வது சிறப்பானதும், அதிர்ஷ்டமானதும்கூட.

(தொடரும்)

# ஆயுத அச்சுறுத்தலில் தப்பியவர்கள் காலநிலை அச்சுறுத்தலில் கடும் பாதிப்பு

இந்தோனேசிய கடற்பரப்பில் இரண்டு மாதங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட் டுள்ள அகதிகளின் கப்பல் கடந்த ஞாயிற்றுக் கிழமை அதிகாலை ஏற்பட்ட புயலுடன் கூடிய மழை காரணமாக கடும் பாதிப்புக்குள்ளாகி யுள்ளது.

அவுஸ்திரேலியா செல்லும் வழியில் இந்தோனேசிய கடற்படையினரால் சர்வ தேச கடற்பரப்பில் வைத்து கைது செய்யப் பட்டு இந்தோனேசிய ஜாவா தீவிலுள்ள மெராக் துறைமுகத்தில் தரையுடன் இணை த்து கட்டப்பட்டுள்ள இக்கப்பலின் கயிறு கடும் காற்றின் வேகம் காரணமாக அறுந்து கப்பல் கடும் தள்ளாட்டத்திற்கு உட்பட்டதால் மக்கள் பெரும் பதற்றத்திற்கு உள்ளாகினர்.

இதன்போது கப்பலிலுள்ள மரக்குற்றி ஒன்று உடைந்து விழுந்ததால் பெண் ஒருவரின் காலில் காயம் ஏற்பட்டதுடன் சிலர் காலநிலை சீரின்மை காரணமாக உடல் நிலை பாதிப்படைந்தனர்.

குழந்தைகள், சிறுவர்கள், வயோதிபர்கள் மற்றும் பெண்களை உள்ளடக்கிய இக்கப் பலை கைது செய்த 120 கடற்படையினரை கொண்ட கடற்படை கப்பல் அதன் அருகில் 100 மீற்றர் தொலைவில் நிறுத்தப்பட்டிருந்த போதும் கடற்படையினர் பராமுகமாக இருந் ததாக அகதிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பின்னர் அருகில் உள்ள தனியாருக்கு சொந்தமான கப்பல் ஒன்றின் உதவியுட னேயே கப்பல் சீர் நிலைக்கு கொண்டுவரப் பட்டு மீண்டும் தரையுடன் இணைத்துக் கட் டப்பட்டது.

இருந்த போதிலும் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஏற்பட்ட புயற்காற்று காரணமாக கப்பல் பாறாங் கற்களுடன் மோதியதால் கப் பலின் பாகங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி யுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை அரசின் ஆயுத அச்சுறுத்தலில் இருந்து தப்பி நாட்டை விட்டு வெளியேறி அகதி தஞ்சம் கோரிய தாம் காலநிலையின் அச்சுறுத்தலில் தவிக்கவிடப்பட்டுள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (6-2)

## இலங்கை தொடர்பாக

# இந்திய நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படுமா?

**அச்சத்தில் மஹிந்த**

இலங்கை தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடுகளில் மாற்றம் ஏற்பட்டுவிடும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அச்சம் கொண்டுள்ளதாலேயே அண்மையில் ஜனாதிபதியின் சகோதரர்கள் இருவரையும் நண்பர் ஒருவரையும் ஜனாதிபதியின் பிரதி நிதிகளாக இந்தியாவுக்கு அனுப்பி வைத்த தாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல்கள் நிறை வடையும் வரையில் இலங்கைத் தொடர்பி லான நிலைப்பாடுகளில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டாம் என இந்தக் குழு இந்திய தலைவர்களிடம் கோரியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவுக்கு இரண்டு நாட்கள் விஜயம் மேற்கொண்ட இந்தக் குழுவின் விஜயத்தின் நோக்கமும் இதுவரையில் தெளிவற்று காணப்படும் நிலை நிலவுகின்றது.

இதற்கிடையில் இந்தியா சென்ற இந்த விசேட குழுவில் வெளியுறவுத்துறை அமைச் சர் ரோஹித போகொல்லாகம உள்ளடக்கப் படாமை குறித்தும் சர்ச்சைகள் எழுந்துள்ளன.

இதுகுறித்த முறையான விடயம் யாதெ னில், இந்த குழுவிற்கு வெளிவிவகார அமைச்சர் என்ற வகையில் அவரே தலைமை வகித்திருக்க வேண்டும் என தெரிவிக்கப்படு கிறது. எனினும் அமைச்சர் ரோகித போகொல் லாகம சோடிக்கப்பட்ட அதிகாரமற்ற வெறும் அமைச்சராக மாத்திரமே அரசாங்கத்தினால் வைக்கப்பட்டுள்ளார்.

இதற்குக் காரணம் கடந்த நான்கு வரு டங்களுக்கு முன்னர் ஐக்கிய தேசிய கட்சி யில் இருந்து விலகி அரசாங்கத்தில் இணைந்து கொண்ட அவர் விரைவில் மீண்டும் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து கொள்வார் என்ற சந்தேகம் ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ள மையாகும்.

இந்த நிலையில் தமது இரகசியங்கள் வெளியே செல்லும் என்ற அச்சத்தின் அடிப் படையிலேயே தற்போது ரோகித போகொல் லாகம அரசாங்கத்தில் ஒரு ஒதுக்கப்பட்டவராக பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (6-2)

## துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில்

# மீள் குடியமர்வோருக்கு விசேட திட்டங்கள்

(வடமராட்சிகிழக்கு)

முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 20 கிராம சேவையாளர் பிரிவுகளில் அனைத்து நலன்புரி நிலையங்களிலும் இருந்துவந்துள்ள 1831 குடும்பங்களைச் சேர்ந்த 5995 பேர் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள மக்களுக்கு 2 ஏக்கர் நெற்பெயிர்செய்யும் நிலம் இலவசமாக உழவு செய்து கொடுப்பதுடன் இதற்கான நெல்விதையும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

இதேபோன்று சிறுதானியம் செய்பவர்களுக்கும் அவர்களது பயிர்செய்கை நிலம் இலவசமாக உழவு செய்து கொடுப்பதுடன் இதற்கான சிறுதானிய விதைகளும்இலவசமாக வழங்கப்படவிருக்கின்றன.

மேலும் இவர்களுக்கு சேவையாற்றுவதற்காக 3 தபால்நிலையங்களும் ப.நோ. கூட்டுறவுச் சங்கங்களின் 7கிளைக்கடைகளும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் பிரதேசத்தில் கமநல சேவை ஆணையாளர் திணைக்களம் , உதவி விவசாய ஆணையாளர் திணைக்களம் ஆகியன தங்களுடைய அலுவலகங்களை திறந்துள்ளன.

அத்துடன் இங்கு பிரதேசசபையும் இயங்கத் தொடங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இவ்இரண்டு திணைக்களங்களும் 25 உழவு இயந்திரங்களை இப் பிரதேச மக்கள் பயன்படுத்துவதற்காக துணுக்காய் பிரதேச செயலரிடம் ஒப்படைத்துள்ளனர்.

மேலும் நலன்புரி நிலையங்கள் தவிர்ந்த வெளி இடங்களில் வசிக்கும் இப் பிரதேசத்தை சேர்ந்த மக்களை க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு பின்பு இப்பிரதேசத்தில் மீளக் குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வெளி இடங்களில் வசிக்கும் குறித்த பிரதேசத்தை சேர்ந்த மக்கள் மீளக்குடியமர விரும் பின் வவுனியாவில் உள்ள முல்லைத்தீவு கச்சேரியில் தமது விபரங்களை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலும் இதுவரை இப்பிரதேச செயலாளர் பிரிவில் மீளக்குடியமர்ந்த மக்களின் இடங்களில் எந்தவித கண்ணிவெடி பாதிப்புகளும் ஏற்படவில்லை எனவும் 90 வீதம் துணுக்காய் பிரதேசசெயலக பிரிவு மக்களின் இயல்பு வாழ்க்கை வழமைக்கு திரும்பியுள்ளது என துணுக்காய் பிரதேச செயலர் செ.தயானந்தா தெரிவித்துள்ளார். (6-2-4-99)

# அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்கிறது

## அரசாங்கத்தின் மீது ஐ.தே.க.குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தியுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தல் பிரச்சாரங்களுக்காக அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளது.

காலை முதல் நள்ளிரவு வரையில் அரச ஊடகங்களில் தேர்தல் பிரச்சாரப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் எதிர்க்கட்சிகளுக்கு எதிரான சேறு பூசல்கள் இடம் பெற்று வருவதாகவும் மேலும் எதிர்க்கட்சிகளின் காரியாலயங்கள் தாக்குதலுக்கு இலக்காகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அரசாங்கப் பணத்தைக் கொண்டு அலரி மாளிகையில் நாள்தோறும் பாரிய விருந்துபசாரங்கள் இடம்பெற்று வருவதாக எதிர்க்கட்சிகள் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆனால் எதிர்க்கட்சிகளினால் செய்யப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் காவல்துறையினர் அசமந்தப் போக்கை காட்டும் அதேவேளை ஆளும் கட்சி வேட்பாளர்களின் சார்பில் வினைத்திறனாக செயற்பட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சுவரொட்டிகள் மற்றும் கட் அவுட்களை அகற்றுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளமை நகைப்புக்குரியதென தெரிவிக்கப்படுகிறது.

கட் அவுட் மற்றும் சுவரொட்டிகளின் சட்டத் தன்மை குறித்து ஜனாதிபதி காலம் தாழ்த்தியா உணர்ந்து கொண்டுள்ளார் என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

(6-2)

## சட்டவிரோத சிகரட்டுகள் மீட்பு

(கொழும்பு)

43 மில்லியன் ரூபா பெறுமதியான சட்டவிரோத சிகரட்டுக்களை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மீட்டுள்ளனர். கொழும்புத் துறை முகத்திற்கு வெளியே வைத்தே குறித்த சிகரட் தொகை கைப்பற்றப்பட்டுள்ளது.

கொள்கலன் ஒன்றில் மிக சூட்சுமமான முறையில் மறைத்து கொண்டு வரப்பட்ட சிகரட்டுக்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

குறித்த சிகரட்டுக்களுடன் ஆறு சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

திட்டமிடப்பட்ட குற்றச் செயல்களை கட்டுப்படுத்தும் வகையில் பொலிஸ்மா அதிபர் அமுல்படுத்தியுள்ள புதிய திட்டத்தின் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (6-2)

## இலங்கைத் தமிழர் வாழ்வுரிமைக்கான

# உலகத்தமிழர் மாநாடு இம்மாதம் தஞ்சையில்

(மதுரை)

ஈழத்தமிழர்களின் வாழ்வுரிமைக்கான உலகத் தமிழர் மாநாடு இம்மாதம் 26, 27 ஆம் திகதிகளில் தஞ்சையில் நடைபெறவுள்ளதாக உலகத் தமிழர் பேரமைப்பு தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

மதுரையில் நிருபர்களைச் சந்தித்த பழ.நெடுமாறன் இது குறித்து மேலும் கூறுகையில்,

இந்த மாநாட்டில் மலேசிய இந்திய காங்கிரஸ் தலைவர் டத்தோ சாமிவேலு, பா. ம.க. நிறுவனர் ராமதாஸ், ம.தி.முக.பொதுச் செயலாளர் வைகோ, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மூத்த தலைவர் நல்லகண்ணு உட்பட பலர் பங்கேற்கவுள்ளனர்.

ஆந்திராவைப் போல தமிழகத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் எனச் சிலர் கூறுகின்றனர். அது பொருத்தமானதாக இருக்காது என்பதால் அக்கருத்தை ஏற்க முடியாது.

தமிழகத்தில் தமிழ் ஆட்சிமொழியாக உள்ளதாக முதல்வர் கூறுவது கேலிக்கூத்து என்றார். (ஓ-6-2)

# யாழ்ப்பாணத்திற்கு நேரடியாகவே தனியார் வாகனங்களில் செல்ல வேண்டும்

## -தென்பகுதி மக்கள் வேண்டுகோள்-

(கொழும்பு)

தனியார் வாகனங்களின் மூலம் யாழ்ப்பாணம் செல்வதற்கு அனுமதிக்கப்படவேண்டுமென தென்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் பிரகாரம் நேரடியாக தனியார் வாகனங்களின் மூலம் யாழ்ப்பாணத்திற்கு போக்குவரத்து மேற்கொள்ள அனுமதி வழங்குமாறு பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

தற்போது தெற்கு மக்கள் குழுக்களாக வடக்கிற்கு பல்வேறு பயணங்களை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதிலும், யாழ்ப்பாணம் வரையில் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளமை காரணமாக தெற்கு மக்கள் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

இதனால், மதவாச்சி சோதனைச் சாவடியைப் போன்றே ஓமந்தை சோதனைச் சாவடியிலும் சோதனையின் பின்னர் வாகனங்கள் மற்றும் மக்கள் செல்ல அனுமதியளிக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (6-2)

# கலைஞர்கள், கிரிக்கெட் வீரர்களுக்கு நாம் ஒருபோதும் இலஞ்சம் வழங்கவில்லை

## -நாமல் ராஜபக்ஷ மறுப்பு-

(கொழும்பு)

கலைஞர்கள் மற்றும் கிரிக்கெட் வீரர்களுக்கு இலஞ்சம் வழங்கியதாக எதிர்க்கட்சிகள் சுமத்திவரும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என ஜனாதிபதியின் புதல்வர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது ஆளும் கட்சிக்கு ஆதரவளிக்குமாறு கோரி கலைஞர்கள் மற்றும் கிரிக்கட் வீரர்களுக்கு தலா ஐந்து இலட்ச ரூபா நிதி இலஞ்சமாக வழங்கப்பட்டுள்ளதென எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன.

ஆனால், நட்சத்திர கிரிக்கட் வீரர்சனத் ஜயசூரிய மற்றும் ஏனைய கலைஞர்கள் சுய விருப்பின் பேரிலேயே ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளதாகவும், எவருக்கும் பணம் வழங்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி ஜெனரல் சரத்பொன்சேகா தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்னதாகவே ஜனாதிபதிக்கு கலைஞர்கள் ஆரதவளிக்கத் தீர்மானித்து விட்டதாவும், 80 இற்கும் மேற்பட்ட கலைஞர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கும் பிரச் சாரங்களை மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

மக்கள் தமக்கு வழங்கி வரும் ஆதர வினைக் கண்டு ஜே.வி.பி. மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி அச்சமடைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (2-6)

# நளினியின் விடுதலையை பாதிக்கும் இந்திய உச்ச நீதிமன்ற தீர்ப்பு

கோட்சேவுக்கு நாதுராம் கோட்சேயின் இளைய சகோதரர்) ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டதில் இருந்து பல வழக்குகளில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ஆயுள் தண்டனை என்பது குற்றவாளியின் ஆயுள் முழுமைக்குமான தண்டனை என்றே பொருளாகும்.

ஆயினும் நன்னடத்தை காரணமாக ஆயுள் தண்டனைக் காலம் குறைக்கப் படுகிறது என்று நீதிபதிகள் கூறியுள்ளனர்.

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அளித்துள்ள இன்றையத் தீர்ப்பு ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட நளினி உள்ளிட்டவர்களின் விடுதலை கோரிக்கையை பாதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (6-2)

கொலைக் குற்றத்திற்கு நீதிமன்றம் விதிக்கும் ஆயுள் தண்டனை குறைந்தது 14 ஆண்டுகள் என்பதே சரி என்றும் 14 ஆண்டுகள் சிறையில் இருந்த கைதி தன்னை விடுவிக்க வேண்டும் என்று கோருவதற்கு எந்த உரிமையும் இல்லை என்றும் இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கொலை வழக்கு ஒன்றில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட ராம்ராஜ் என்ற கைதி தான் சிறையில் 14 ஆண்டுகள் கழித்துவிட்ட காரணத்தினால் தன்னை விடுவிக்க வேண்டும் என்று கோரி செய்த மேல்முறையீட்டை விசாரித்த உச்ச நீதி மன்ற நீதிபதிகள் அல்டாமாஸ் கபீர் சிரியாக்ஜோசஃப் ஆகியோர் கொண்ட நீதிமன்ற அமர்வு கொலைக் குற்றத்திற்காக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கைதி 14 ஆண்டுகள் ஆன பின்பு தன்னை விடுவிக்க வேண்டும் என்று கோருவதற்கு உரிமை ஏதுமில்லை என்று கூறியுள்ளது.

தனக்கு விடுதலை கோரி மேல்முறையிட்டு செய்த ராம்ராஜ் குறைந்தது 20 ஆண்டு காலம் சிறையில் இருக்கவேண்டும் என்பதை உறுதி செய்யுமாறு சட்டீஸ்கார் அரசைக் கேட்டுக்கொண்ட நீதிமன்றக்குழு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளி குறைந்தது 14 ஆண்டுகளாவது சிறையில் இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

மகாத்மா காந்திகொலை வழக்கில் கோபால்

# ஜனாதிபதி தேர்தலில்

# இருபிரதான வேட்பாளர்களையும் ஆதரிக்கப்போவதில்லை; தமிழ் மக்களின் உணர்வை மதித்தே இறுதி முடிவு

## த.தே.கூ. நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு இரு பிரதான வேட் பாளர்களுக்கும் நிச்சயம் ஆதரவு வழங்கப் போவதில்லை. தமிழ் மக்களின் உணர்வை மதித்தே இறுதி முடிவெடுக்கப்படும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெயானந்த மூர்த்தி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக அவரிடம் சர்வதேச ஊடகமொன்று கருத்துக் கேட்ட போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழ் மக்களைக் கொன்று குவித்தும், அகதிகளாக்கியும் தேசிய விடுதலைப் போராட் டத்தை சதியின் மூலம் பின்னடைவை ஏற் படுத்தியவர்களான ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ, முன்னாள் இராணுவத் தளபதி ஜென ரல் சரத் பொன்சேகா ஆகிய இருவரும் தற் போது தேர்தலில் எதிரும் புதிருமாகக் குதித்துள்ளனர்.

அவர்கள் தமிழ் மக்களின் அழிவையும் போர் வெற்றியையும் தட்டில் ஏந்திக் கொண்டே சிங்கள மக்களிடம் வாக்குக் கேட்கின்றனர். தமிழர்களின் குருதி காயமுன்னர் தமிழ் மக்களிடம் எல்லாவற்றையும் மறந்து ஆதரவு கேட்கின்றனர். இவர்களுக்கு எவ்வாறு தமிழ் மக்கள் வாக்களிக்க முடியும்.

பெரும்பான்மையான தமிழ் மக்கள் இவர் களுக்கு வாக்களிக்க முடியாது என்ற கருத்தி லேயே உள்ளனர். எனவே தமிழ் மக்களின் விருப்புக்கு எதிராக தமிழ் தேசியக் கூட்ட மைப்பு எந்தவொரு தீர்மானத்தையும் எடுக் கப் போவதில்லை என ஜெயானந்தமூர்த்தி தெரிவித்துள்ளார்.

மற்றொரு கேள்விக்கு அவர் பதிலளிக் கையில்,

தமிழ் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்து ஒன்றாகவே செயற்படும். ஆனால் ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பி னர்களுக்கு இடையில் பல்வேறுபட்ட கருத்து வேறுபாடுகள் உண்டு. அவையாவும் கலந்து ரையாடி முடிவெடுக்கப்படும்.

கட்சியில் உள்ள குறிப்பிட்ட ஒருசிலர் தாம் எடுக்கும் முடிவுகளை அனைத்துப் பாராளு மன்ற உறுப்பினர்கள் மீதும் திணிக்கவோ மக்களை விருப்புக்கு மாறாக வழிநடத்தவோ முடியாது. அவ்வாறு செயற்பட யாராவது முற் பட்டால் அவர்களை வரலாறு மன்னிக்காது.

இவ்வாறுதான் அரசியல் தீர்வுத் திட்ட மொன்றை இவர்கள் எழுதிவிட்டு ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது திணிக்க முற்பட்டனர். ஆனால் அதில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் காரணமாக தற்போது அது பிசுபிசுத்துப் போயுள்ளது.

சுயநல அரசியலுக்காக எமது உரிமையை விட்டுக் கொடுக்க முடியாது, இந்த ஜனாதி பதியின் ஆட்சிக் காலத்தின் போது எமது மக் கள் பட்ட துன்ப துயரங்களை எவரும் மறந்து விட முடியாது. இதை மறந்து விட்ட நிலையில் கூட ஒரு சிலர் நடந்து கொள்வது வேதனை தருகின்றது.

இவர்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலை நோக்காகக் கொண்டு செயற்பட்டாலும் மக்க ளின் வலியைப் புரிந்து கொள்ள வேண்டும். அவ்வாறனவர்களுக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள்.

இந்தியாவின் நலனுக்காக நாம் அரசியல் செய்ய முடியாது. இந்தியாவின் சதி முயற் சியினாலேயே நாம் இன்று இந்நிலைக்கு வந்துள்ளோம். இந்த ஜனாதிபதி தேர்தலிலும் இந்தியா தனது நலனைக் கருத்தில் கொண்டு யாருக்கு ஆதரவு வழங்க வேண்டுமென கூட்டமைப்புக்கு உத்தரவிடலாம்.

ஆனால் நாம் அதற்கு இணைந்து போக முடியாது. எனினும் இந்தியாவின் சொல்லைத் தட்ட முடியாது எனத் தெரிவித்து அல்லது இராஜதந்திர காய் நகர்த்தல் எனக் கூறி எமது கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஒரு சிலர் இந்தி யாவின் உத்தரவுக்கு இணைந்து போக முற் படலாம். ஆனால் அவ்வாறு ஒரு நிலை ஏற் படுமானால் அது பாதகமான நிலையையே ஏற்படுத்தும்.

ஜனாதிபதி வேட்பாளர்களுடன் நான்கு அம்சக்கோரிக்கை, ஐந்து அம்சக்கோரிக் கையை முன்வைத்து ஆதரவு வழங்கலாம் எனக் கூறுவதெற்கெல்லாம் பின்னணிக் காரணங்கள் உண்டு. இவ்வாறான உறுதி மொழிகளுக்கு கடந்த காலத்தில் என்ன நடந் தது என்பதை மக்கள் மறந்துவிடவில்லை.

தேர்தலின் பின்னர் எல்லா உறுதிமொழிக ளும் காற்றில் பறந்துவிடும். எனவே இப்போ தும் இவ்வாறான பசப்பு வார்த்தைகளைக் கூறி மக்களை ஏமாற்றமுடியாது என்றார் ஜெயானந்தமூர்த்தி. மற்றொரு கேள்விக்கு அவர் பதிலளிக்கையில்,

கனகரெத்தினம் எம்.பி. தற்போதும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். எனினும், அவ ரின் விடுதலையில் கூட்டமைப்பு உரிய நட வடிக்கையோ முறையான அழுத்தமோ கொடுக் கவில்லை என்றே கூறவேண்டும். அவரை கட்சி ரீதியில் உரியவர்கள் சென்று பார்வை யிட முயற்சிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (6-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### நொச்சி

Botanical Name- Vitex negundo
Family - Verbenaceae
Engl - Indian privet
Sinh - Nika

கிளைகள் மற்றும் இலைகளின் அடிப்புறம் மெல்லிய சாம்பல் நிற தூவிகளால் மூடப்பட்டி ருக்கும். பெரிய புதர்ச் செடி அல்லது சிறிய மரமாகும். இலைகள் கூட்டிலை வகையினது; ஒவ்வொன்றிலும் 3-5 சிற்றிலைகள் காணப் படும். மடல்கள் ஈட்டி வடிவிலானது ; மையத் திலுள்ள சிற்றிலை பெரியதாகும்.

மலர்கள் கொத்தாக அமைந்தவை ; பெரியவை ; தனி மலர் சிறியவை, நாவல் கலந்த நீலம் நிறம் கொண்டவை, கனிகள் கெட்டியானவை, கனிந்த நிலையில் கருமை நிறத்தோடு காணப்படும் ; விதைகள் நீள்வட்ட வடிவான அல்லது தலைகீழ் முட்டை வடி வின. மலர்கள் பங்குனி முதல் ஆவணி மாதங்களில் தோன்றுகின்றன.

**பரம்பலும், இனவிருத்தியும்**

எல்லா வகை மண்களிலும் நன்கு வளரக் கூடியது. அதிலும் உலர் மண் கலப்புள்ள இடங்களில் பரம்பல் அதிகம் காணப்படும். விதைகள் மூலமும், துண்டங்களின் மூல மும் இனவிருத்தி செய்யலாம்.

◆ நொச்சியிலைச் சாற்றை கொண்டு கண்மை தயாரித்து கண்களிற்கு இட்டால் கண் நல்ல குளிர்ச்சியடையும். நொச்சியி லைச்சாற்றை எடுத்து சுத்தமான காரிக்கண் துணியில் வடித்து சேகரித்து கொள்ளவும். அதனுள் சுத்தமான சதுரத் துணியை சாறு முடியும் வரை தோய்த்து உலர்த்தி திரிபோல உருட்டி நல்லெண்ணெயில் கொழுத்தி அவ் அயடை ஆமணக்கு நெய்யில் பிசைந்து கண்மையாக பயன்படுத்தினால் கண்நோய் கள் அண்டாது.

◆ கடுமையான காய்ச்சல் உள்ளபோது இதன் இலையை கொதிக்கும் நீரில் இட்டு அதிலிருந்து எழும் நீராவியைப் பிடித்தால் வியர்வை தோன்றி காய்ச்சல் குறையும்.

◆ **முழங்கால்,** இடுப்புவலி குணமாக – நொச்சியிலை ஒரு கைப்பிடியளவு, வெள் ளைப்பூண்டு சிறிதளவு, கஸ்தூரி மஞ்சள் சிறிதளவு இலைகளை அம்மியில் வைத்து நசித்து ஒரு சட்டியில் போட்டு ஒரு டம்ளர் அளவு வேப்பெண்ணெயை விட்டு மருந்து கள் சிவக்கும் வரை காய்ச்சி இறக்கி வைத்து ஆறியபின் வடிகட்டி ஒரு சீசாவில் விட்டு வைத்துக் கொண்டு வலி ஏற்பட்ட சமயம் இந்த எண்ணையைத் தடவி வந்தால் முழங் கால், இடுப்புவலி குணமாகும்.

◆ **பாரிச வாயுவிற்கு** – தேவையான அளவு நொச்சியிலையை அம்மியில் வைத்து மைபோல அரைத்து, ஒரு பெரிய விளாங்கா யளவு எடுத்து, ஒரு பாத்திரத்தில் போட்டு, சாம்பிராணியையும் தூள் பண்ணிப் போட்டு 3 கோழிமுட்டை வெண்கருவிட்டு, ஒரு டம்ளர் வேப்பெண்ணெயும் அதேயளவு பசும்பா லும் சேர்த்து ஒன்றாக கலக்கி அடுப்பில் வைத்து கொதிக்க வைத்து சுண்டக்காய்ச்சி குழம்பு போல வந்தவுடன் இறக்கி இளஞ் சூடாக இருக்கும் போதே உடல் முழுவதும் பூசி சின்னாமணக்கு இலையை தணலில் வாட்டி அதை மேலே வைத்து கட்டி வந்தால் பாரி சவாயு குணமாகும்.

◆ **குதிவாதம் குணமாக** : நொச்சியிலை யையும், வாதமடக்கி இலையையும் ஒரேயள வாக எடுத்து, ஆய்ந்து ஒரு சட்டியில் போட்டு அடுப்பில் வைத்து இரண்டு தேக்கரண்டிய ளவு விளக்கெண்ணெயை விட்டு நன்றாக வதக்கி, இளஞ்சூடாக இருக்கும் போதே குதிக் காலில் கனமாக வைத்து கட்டி விட வேண்டும். இவ்விதமாக 7 நாள் கட்டி வந்தால் குதிவாதம் குணமாகும்.

◆ **கை, கால் குடைச்சல் குணமாக**

ஒரு பாணையில் வெந்நீர் வைத்து அதில் ஒரு கைப்பிடியளவு நொச்சியிலையையும், ஒரு கைப்பிடியளவு தாழை இலையையும் போட்டு நன்றாகக் கொதிக்க வைத்து கலக்கி விட்டு தாங்கக்கூடிய சூட்டில் குளித்தால் கை, கால் குடைச்சல் நீங்கும்.

◆ **முழங்கால் வீக்கத்திற்கு** : நொச்சியி லைகளை ஒரு சட்டியில் போட்டு 2 தேக்கரண் டியளவு வேப்பெண்ணெய் விட்டு நன்றாக வதக்கி இளஞ்சூட்டுடன் வீக்கம் உள்ள இடத்தில் வைத்துக் கட்டி மறுநாள் அவிழ்த்து பார்த்தால் வீக்கம் குணமாகும்.

◆ இலைகளை வதக்கி வீக்கமுள்ள இடங்க ளில் சூடு தணிய வைத்துக்கட்ட வீக்கம் போகும். கட்டிகளை கரைத்து கெட்ட மாசுக் களை வெளிப்படுத்துவதில் இதன் இலைகள் சிறந்த பயனளிக்கும்.

◆ தலைவலி, நீர்க்கோவை, தலைப்பாரத் திற்கு உலர்ந்த இலைகளை புகைசுருட்டாக உபயோகிக்கலாம்.

◆ நொச்சி வேர்ப்பட்டை 35 கிராம் அரைத்து 8 டம்ளர் நீர் விட்டு 1/4 ஆக குறுக்கிக் காய்ச்சி 30 மில்லி - 60 மில்லி அளவு காலை, மாலை எடுக்க சிறுநீர் எரிச்சல் தணியும்.

◆ நொச்சியிலை, கஞ்சாங்கோரை, வேப் பங்கொழுந்து, நுணாயிலை, துளசியிலை, சீந்தில் கொடி இலைகளில் வகைக்கு ஒரு கைப்பிடியளவு எடுத்து சுத்தமாக்கி அதைப் பொடியாக கிள்ளி ஒரு சட்டியில் போட்டு அடுப் பில் வைத்து நன்றாக வதக்கிய பின் அதில் இரண்டு டம்ளர் அளவிற்கு சுண்டக்காய்ச்சி இறக்கி ஆறியபின் இலைகளைப் பிழிந்து எடுத்துவிட்டு அந்த தண்ணீரில் காலை மாலை 10 மில்லி அளவு கொடுத்துவந்தால் குழந்தைகட்கு ஏற்படும் மந்தம் தீரும்

◆ அதிமதுரம், மிளகு, நன்றாக உலர்ந்த வெள்ளெருக்கும் பூ, கருந்துளசி இலை ஆகியவற்றை எடுத்து அம்மியில் வைத்து நொச்சிச் சாற்றால் அரைத்து மிளகளவு மாத்திரையாக உருட்டி, உலர்த்தி வைத்துக் கொள்ளவும். ஆஸ்மாவால் அவஸ்தைப்படு பவர்கள் வெந்நீரில் உரைத்து காலை1, மாலை 1 மாத்திரை எடுக்க இழுப்புக் குறையும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்பல்கலைக்கழகம், கைதடி

கந்தலாலும், கிழிசலாலும் தவறுகளை மறைக்க முடியாது. ஆனால் பட்டாடை மறைக்கும் போது சட்டத்திற்கு கண் தெரிவதில்லை

*– ஷேக்ஸ்பியர்*

வலம்புரி

## யாழ். புகையிரத நிலையத்தில் மார்கழி நீராடும் பயணிகள்

ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்னர் தரைவழிப் பாதையால் வெளிமாவட்டங்களுக்கான பயணம் இடம் பெறுகின்றது.

குறைந்த கட்டணத்தில் பஸ்ஸில் பயணம் செய்கின்றோம் என்பதைத் தவிர அந்தப் பயணத்தில் இருக்கக்கூடிய துன்பம் பற்றி எவருமே கவனம் செலுத்துவதாக இல்லை.

நேற்றைய தினம் அதிகாலை வேளை யாழ்ப் பாணத்தில் மழை பொழிந்த வண்ணமிருந்தது. சுமார் ஆயிரத்து ஐந்நூறு பயணிகள் வெளிமா வீட்டங்களுக்குச் செல்வதற்காக யாழ். புகையிரத நிலையத்தில் கூடினர்.

புகையிரத நிலையத்தின் திறந்த மண்டபம் மழைத் தண்ணீர் சேகரிக்கும் நிலையம் போல் காட்சி அளித்தது.

பயணிகள் தங்கள் பிரயாணப் பொதிகளை நிலத்தில் வைக்க முடியாத அளவிற்கு வெள்ளம். மழையில் நனைந்தபடி தங்கள் பொதிகளை தலையில் சுமந்தவாறு வரிசையில் காத்திருந்தனர்.

குழந்தைகள், முதியவர்கள் எனப் பலரும் மழையில் நனைந்தவாறு நின்ற காட்சியை பார்த்தபோது அந்த குளிரிலும் அடிவயிறு பற்றி எரிந்தது.

ஜனாதிபதித் தேர்தல், இதில் யாரை ஆதரிப்பதென்ற முடிவெடுப்பதற்காக தமிழ் எம்.பிக்கள் தங்களுக்குள் ஆலோசனை, அமைச்சர்களின் வருகை, அவர்களுக்கு மாலையிட வேண்டுமென்ற அதிகாரிகளின் பணிப்பு. கூடவே மாணவர்கள் காலில் விழுந்து கும்பிடவேண்டும். அதுவே பண்பாடு என்ற அறிவுறுத்தல்.

கூடவே அமைச்சர்களின் வருகைக்காக பல மணிநேரம் காத்திருக்கும் யாழ்ப்பாணத்து உத்தியோகத்தர்கள். இவ்வாறான வேடிக்கை ஒரு புறத்தில் நடந்தேறுகின்றது.

வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், வலிகாமம் எனக் குடாநாட்டின் பல மருங்கிலும் இருந்து வரும் பயணிகள் மழைக்கு ஒதுங்க முடியாமல் நனைந்து வரிசையில் நிற்கும் பரிதாபம் எவருக்கும் தெரியாத விடயமாகிப் போயிற்று.

முன்பெல்லாம் பிரச்சினைகள் இருக்கக் கூடிய இடங்களுக்கே அமைச்சர்களை அழைத்துச் செல்வார்கள். ஆனால் இப்போது மாணவர்கள் பான்ட் இசைக்க, பொன்னாடை, சந்தன மாலை, வரவேற்பு நடனம் என எல்லாமுமே ஒன்று சேர்ந்து இந்த மண்ணில் பிரச்சினை எதுவும் இல்லை என்பதைப் பிரதிபலிக்க அமைச்சர்களின் விஜயம் நடந்தேறுகிறது.

யாழ்ப்பாணத்தில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் தங்கியிருந்து பணியாற்றுவதால் ஏனைய அமைச்சர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவேண்டிய அவசியம் இல்லை எனலாம்.

தேவையாயின் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் அவர்கள் தொடர்பு கொண்டு நிலைமையை கேட்டறியலாம்.

இதைவிடுத்து யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வதும் உத்தரவாதமற்ற வாக்குறுதிகளை வழங்குவதும் தமிழ் மக்களை மீண்டும் மீண்டும் ஏமாற்றுவதாகவே அமையும்.

இதற்கு யாழ். புகையிரத நிலையத்தில் மழையில் நனையும் பயணிகளின் அவலம் தக்கதோர் அடையாளம்.

### அரச இரகசியங்களை வெளியிட்டமைக்காக

# சரத்பொன்சேகாவுக்கு 14 வருட சிறைத்தண்டனை வழங்க முடியும்

### சிரேஷ்ட சட்டத்தரணி தெரிவிப்பு

(கொழும்பு)

அரச இரகசிய சட்ட மூலத்தின் கீழ் அரச இரகசியத்தை வெளியிட்ட குற்றச்சாட்டிற்காக பொதுவேட்பாளர் ஜெனரல் சரத்பொன்சேகாவுக்கு 14 வருட சிறைத்தண்டனை விதிக்க முடியும் என சிரேஷ்ட சட்டத்தரணி காலிங்க இந்திர திஸ்ஸ தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தின் போது வெள்ளைக் கொடிகளை ஏந்திச் சென்று விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களை சுட்டுக்கொல்லுமாறு பாதுகாப்புச்செயலாளர் கோத்தபாய உத்தரவிட்டதாக ஜெனரல் பொன்சேகா வெளியிட்டிருந்தகருத்துத்தொடர்பாக கருத்து வெளியிட்ட போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இந்தகருத்தானது அரச இரகசிய சட்டத்தின் 6 (ழ) ஈ பிரிவின் 7ஆவது சரத்திற்கு அமைய 14 வருடசிறைத்தண்டனை வழங்கப்படக்கூடிய குற்றமாகும் எனவும் இந்திர திஸ்ஸ குறிப்பிட்டுள்ளார். ஊடகத்துறை அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுசம்பந்தமாக காவல்துறைமா அதிபர் விசாரணை நடத்த முடியும். சட்டமா அதிபரினால் சரத்பொன்சேகாவிற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முடியும் எனவும் இந்திர திஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இதேவேளை இங்கு கருத்துத் தெரிவித்துள்ள பிரபல சட்டத்தரணி கோமின் தயாசிறி, சரத்பொன்சேகாவின் இந்தக்கருத்தை அடிப்படையாகக்கொண்டு இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டனவா என்பதை அறிய யுத்தநீதிமன்றத்திற்கு சர்வதேச ரீதியில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் சரத்பொன்சேகா சாட்சியாளராக ஆஜராக வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

சரத்பொன்சேகா நாட்டின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் யுத்த நீதிமன்றத்தில் ஆஜராகிய ஜனாதிபதி என்ற வகையில் இலங்கைக்கு பெரும் அவப்பெயர் ஏற்படக்கூடும் எனவும் தயாசிறி சுட்டிக்காட்டியுள்ளார்.

(6-2)

# சீரற்ற காலநிலையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

(கொழும்பு)

சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் 500 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளனர். செங்கலடி, வெள்ளாவெளி மற்றும் வாகரை ஆகிய பிரதேச மக்களே இவ்வாறு இடம் பெயர்ந்துள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் செங்கலடி, வெள்ளாவெளி, வாகரை, காத்தான்குடி, வாழைச்சேனை, களுவாஞ்சிக்குடி மற்றும் வவுனதீவு ஆகிய பிரதேசங்களில் உள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தேவையான நிவாரணங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அவர் கூறினார்.

இதேவேளை சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, காரைநகர் ஆகிய பகுதிகளில் 24 மீனவப்படகுகள் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. கடல் கொந்தளிப்பு காரணமாகவே மீனவப் படகு அடித்துச்செல்லப்பட்டதாகவும் 113 மீனவர்களை கடற்படையினர் காப்பாற்றியுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இவர்கள் தொடுவான், சிலாபம், நீர் கொழும்பு மற்றும் கற்பிட்டி ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை திருகோணமலை மாவட்டத்தில் பெய்து வரும் கடும் மழை காரணமாக பலமீனவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. தாழமுக்க நிலையினால் கடந்த சில தினங்களாக மீனவர்கள் தங்கள் தொழிலை செய்ய முடியாத நிலை ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதில் பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் 5ஆயிரத்து 824 குடும்பங்களைச் சேர்ந்த 24 ஆயிரத்து 649 பேர் தொழில் இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளதாக அப்பிரதேச செயலாளர் சசிகலா ஜெலதீபன் தெரிவித்தார்.

இவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை கிராம சேவையாளர்கள் ஊடாக மேற்கொண்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (2-6-9)

# வவுனியாவில் வாகன விபத்து ; பரீட்சைக்குச் சென்ற மாணவர்கள் காயம்

(கொழும்பு)

வவுனியாவில் நேற்றுக்காலை இடம்பெற்ற வாகன விபத்தில் கல்விப் பொதுத் தராதர சாதாரணப் பரீட்சை எழுதச் சென்ற மாணவர்கள் பலர் காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா செட்டிக்குளம் முகத்தான் குளப் பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் 13 பாடசாலை பரீட்சார்த்திகள் உட்பட 21 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றுக்காலை 8.45 மணியளவில் குறித்த பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தண்ணீர் பௌசர் மீது அதிக வேகத்துடன் வந்த தனியார் பஸ் வண்டி ஒன்று மோதியதாலே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இந்தச் சம்பவத்தின் போது நிறுத்தி வைக்கப்பட்ட பௌசர் தூக்கி எறியப்பட்டதாகவும் பௌசர் பிரண்ட நிலையில் தண்ணீர் வீதியில் சிந்தி ஓடியதாகவும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

சம்பவத்தின் சாதாரணதர கணிதப்பரீட்சை எழுதச் சென்ற 13 மாணவர்களும் பரீட்சையைக் கண்காணிக்கும் கடமைக்காகச் சென்ற ஆசிரியர் ஒருவரும் செட்டிக்குளம் வைத்திய சாலை பணியாளர்கள் இருவரும் மற்றும் 5 பொதுமக்களும் காயமடைந்துள்ளனர்.

இவர்களில் மிகவும் ஆபத்தான நிலையில் காணப்பட்ட ஆசிரியர் மற்றும் வைத்தியசாலை பணியாளர் ஆகியோர் தற்போது மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை செட்டிக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(6-2)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### கல்வியும் சமுதாயமும்

சிரத்தைதான் நமக்குத் தேவை துரதிர்ஷடவசமாக இந்தியாவிலிருந்து இது கிட்டத்தட்ட மறைந்தே போயிருக்கிறது. இப்போது நாம் இருக்கும் நிலைமைக்கே சிரத்தையை இழந்துவிட்டது. தான் காரணமாகும்.மனிதனுக்கு மனிதன் வேறுபடுவதற்குக் காரணம் இந்தச் சிரத்தையிலுள்ள வேறுபாடே தவிர வேறொன்றுமில்லை. இந்தச் சிரத்தைதான் ஒரு மனிதனைப் பலவீனனாகவும் தாழ்ந்தவனாகவும் ஆக்கிவிடுகிறது.

நமது தேசிய இரத்தத்தில் ஒரு பயங்கரமான நோய் ஊர்ந்து கொண்டிருக்கிறது.அதாவதுஎதை எடுத்தாலும் எள்ளி நகையாடுவது சிரத்தை இல்லாமல் இருப்பது. இந்தநோயை ஒழித்துக் காட்டுங்கள் வலிமையான சிரத்தையைப் பெற்றவர்களாக இருங்கள் மற்றவை அனைத்தும் தாமாகவே நிச்சயம் வந்து சேரும்.





வலி கிழக்கு அறநெறி மன்றத்தால் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட நாவலர் தின விழாவில் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட வைத்திய கலாநிதி வை. தியாகராசா, சைவப் புலவர் ஸ்ரீதரன், மன்றத் தலைவர் சிவஸ்ரீ சோ. இ. பிரணதார்த்திஹரக் குருக்கள், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் ஆகியோர் இறைவணக்கம் செலுத்துவதையும், யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் கலாநிதி மா. வேதநாதன் உரையாற்றுவதையும் மாணவி ஒருவரின் பேச்சு நிகழ்வையும் படங்களில் காணலாம்.

## பொதுசன மாதாந்த உதவிப்பண கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு - கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் மீளக்குடியமர்ந்தோரில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெற கடந்த ஒருவார காலத்தில் விண்ணப்பத்த வர்களிற்கு கொடுப்பனவு வழங்குவதற்கான பட்டியல் தபாலகம், உபதபாலகம் ஆகிய வற்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனவே பொதுசன மாதாந்த உதவிப்பண கொடுப்பனவுக்கு விண்ணப்பித்தவர்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமைக்குள் தமக்குரிய கொடுப்பனவுகளை உரிய அலு வலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு கோப் பாய் பிரதேச செயலர் சீ.ஏ. மோகன்ராஸ் தெரிவித்துள்ளார். (6-9)

## விடுவிக்கப்பட்ட மக்களுக்கான முதற்கட்ட கொடுப்பனவு வழங்கப்படவில்லை

(வடமராட்சி கிழக்கு)

நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக் கப்பட்டு வடமராட்சி, பருத்தித்துறை, பிரதேச செயலர் பிரிவுகளில் வசிக்கும் மக்களில் அநேகமானோருக்கு முதற்கொடுப்பனவாக ரூ.5 ஆயிரம் இதுவரைக்கும் வழங்கப்பட வில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதேநேரம் வடமராட்சி கிழக்கு, கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவுகளில் வசிக்கும் விடுவிக்கப்பட்ட மக்களுக்கு முதற்கட்ட கொடுப் பனவாக ரூ. 5 ஆயிரம் வழங்கப்பட்டதுடன் இரண்டாம் கட்ட கொடுப்பனவான 20 ஆயி ரம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகிறது. (6-4-99)

## திருப்பாவை விரதம்

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தானத்தில் இன்று புதன்கிழமை முதல் 30 தினங்கள் திருப் பாவை விரதம் அனுஷ்டிக்கப்படவுள்ளது

தினமும் அதிகாலை 5 மணிக்கு திருப் பள்ளி எழுச்சியுடன் ஆரம்பமாகி அபிஷேக ஆராதனைகளை அடுத்து ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த 30 திருப்பாவை பாடல்கள் ஓதப்படவுள்ளன. (6-4-36)

## நிவாரணமின்றி மீளக்குடியமர்ந்த குடும்பங்கள்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதி பர் பிரிவுக்குட்பட்ட குடத்தனை, மணற்காடு, அம்பன், பொற்பதி ஆகிய இடங்களைச் சேர்ந்த, நலன்புரி நிலையங்களில் இருந்து வந்து தற்போது உறவினர்கள் வீடுகளில் வசிக்கும் மக்களுக்கு கடந்த மாதம் 11 ஆம் திகதியின் பின் எந்தவித நிவாரணமும் வழங் கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதேநேரம் இவர்களுக்கான நிவாரண முத்திரைகூட இன்று வரைக்கும் வழங்கப்பட வில்லை எனவும் ஏறத்தாழ 250 க்கும் மேற் பட்ட குடும்பங்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள் ளதாகவும் தெரி விக்கப்படுகிறது. (2-4-99)

## மஹா கும்பாபிஷேகத்தையொட்டிய சிறப்பு மலருக்கான ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நுழைவாயில் இராஜகோபுர மகாகும்பாபிஷே கமும் ஆலய கும்பாபிஷேகமும் அடுத்த வருடம் வெகுவிமரிசையாக நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு கும்பாபிஷேகத்தை யொட்டிய சிறப்பு மலரொன்றை வெளியிடு வதற்கு ஆலய அறங்காவலர் சபை தீர் மானித்துள்ளது.

அச்சிறப்பு மலரில் உங்கள் ஆக்கங்கள் இடம்பெறவேண்டுமாயின் சைவசித்தாந்தம், வரலாறு, நயீனாதீவுடன் தொடர்புடைய ஆக்கங்கள், பண்ணிசை, பண்பாடு, கலை, கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம், சக்தி தத்துவம், ஆலயமும் சமுதாயமும், சக்தி உபா சகர்கள் எனும் விடயப் பரப்புகளில் ஏதேனும் ஒருவிடயம் பற்றிய ஆக்கமொன்றை ஐந்து பக்கங்களுக்கு மேற்படாமல் எழுதி உங்கள் வர்ணப் புகைப்படத்துடன் எதிர்வரும் பெப்ர வரி மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக் கக் கூடியதாக கௌரவ செயலாளர், அறங் காவலர் சபை, ஸ்ரீநாக பூசனி அம்மன் தேவஸ்தானம், நயி னாதீவு எனும் முகவரிக்கு பதிவுத் தபா லில் அனுப்பி வைக்கும் படி ஆலய அறங்காவலர் சபையினர் கேட்டுள்ளனர். (6-9)

## கவிதை நூல் வெளியீட்டுவிழா

விக்ரோறியன் ஆங்கில கல்வி நிலையத்தினால் நடத்தப்படும் யாழ். இந்துக் கல்லூரி ஆங்கில ஆசிரியர் சு. மகேஸ்வரன் எழுதிய 'The ocean of pearls' என்னும் கவிதை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப் பிப்பதுடன் கௌரவ விருந்தினராக யாழ். மாநகர சபை முதல்வர் திரு மதி யோகேஸ்வரி பற்குணராசா சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட நீதிபதி ஆர். வசந்தசேனன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் அறிமுகவுரையை நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன் வழங்கவுள்ளார். தொடர்ந்து பிரதம விருந்தினர் நூலை வெளியிட்டுவைக்க முதற்பிரதியை தொழிலதிபர் இ.எஸ். பி. நாகரத்தினம் பெற்றுக் கொள்ளவுள்ளார். மேலும் நூல் மதிப்பீட் டுரையை பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் அதிபர். எஸ். பத்மநாதன், ஏ. சாந்தன் யாழ். பல்கலைக்கழக ஆங்கி லத்துறை விரிவுரையாளர் வி. பரந்தாமன் ஆகியோர் வழங்கவுள் ளனர். (6-4)



யாழ். சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற சமயப்பட்டறை நிகழ்வில் சமயதீட்சை வழங்கிய சிவஸ்ரீ த. வீரபத்திரக் குருக்களையும் தீட்சை பெற்ற மாணவர்களையும் படத்தில் காணலாம்.

## அஞ்சலதிபர் நியமனம்

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிர தேச அஞ்சல் அதிபராக ரி. ஆதவன் நிய மிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னர் உப அஞ் சல் அதிபராக கடமையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. (6-4-72)

## சட்ட விரோத கசிப்பு உற்பத்தி

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு, மணற்காடு, குடத் தனை ஆகிய இடங்களில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ளது.

இந்த நடவடிக்கையானது இளம் சமூ கத்தை சீரழிக்கும் என அச்சம் தெரிவிக்கப் பட்டுள்ளதுடன் பொது மக்களும் பல அசௌ கரியங்களுக்குள்ளாவதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

எனவே இது தொடர்பாக உரிய அதிகாரி கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ள னர். (6-4-93)

## வருடாந்த திருவிழா

(ஊர்காவற்றுறை)

எழுவைதீவு புனித தோமையார் ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (6-72)


Affiliated with JOBSNET
Ministry of Labour Relation and Manpower

18 வருட அனுபவம்

- தபால் மூலம் -
தமிழ் மொழி மூலம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
Dec 2009 to May 2010

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொன்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்
கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், வேருவலை மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.12.2009

# பந்துக்குப் பந்து பரபரப்பான போட்டியில் இந்திய அணி மூன்று ஓட்டங்களால் வெற்றி

(ராஜ்கோட்)

பந்துக்குப் பந்து பரப்பரப்பான முதலாவது ஒரு நாள் போட்டியில் இந்திய அணி 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நடுத்தர வரிசை துடுப்பாட்ட வீரர்களின் சொதப்பலில் இலங்கையின் போராட்டம் வீணானது. இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 3 டெஸ்ட், 2 இருபது-20 மற்றும் 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் தொடரை இந்திய அணி 2:0 என்ற கணக்கில் கைப்பற்றிய நிலையில் தொடர்ந்து நடைபெற்ற இருபது-20 தொடர் 1:1 என்ற கணக்கில் சமநிலையானது.

இந் நிலையில் 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரின் முதலாவது போட்டி நேற்று ராஜ்கோட்டில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித் தலைவர் சங்கக்கார முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

**அதிரடி ஆரம்பம்**

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ஆரம்ப ஜோடி சேவாக்-டெண்டுல்கர் இணைந்து அதிரடியான ஆட்டத்தை வழங்கினர்.

இந்த ஜோடியின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் இந்திய அணி 14.3 ஓவர்களில் 100 ஓட்டங்களைக் கடந்தது.

இதில் விரேந்திர சேவாக் 34 பந்துகளிலும் டெண்டுல்கர் 48 பந்துகளிலும் அரைச் சதத்தைப் பூர்த்தி செய்து அசத்தினர். இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 19.3 ஓவர்களில் 153 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது சச்சின் டெண்டுல்கர் 63 பந்துகளில் (10 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 69 ஓட்டங்களை எடுத்து பெர்னாண்டோவின் பந்து வீச்சில் நேரடியாக போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

**இணைந்தனர் சேவாக்-தோனி**

தொடர்ந்து 2-வது விக்கெட்டுக்காக இணைந்த சேவாக்-தோனி ஜோடி அதிரடியைத் தொடர இந்திய அணி 24.2 ஓவர்களில் 200 ஓட்டங்களை எட்டியது.

இதில் விரேந்திர சேவாக் 66 பந்துகளில் தனது 12 -வது ஒரு நாள் சதத்தைப் பூர்த்தி செய்து கலக்கினார். மறுமுனையில் தோனி 34 பந்துகளில் அரைச் சதத்தைப் பூர்த்தி செய்ய இந்திய அணி 29.1 ஓவர்களில் 250 ஓட்டங்களைக் கடந்தது.

இந்த ஜோடி 2-வது விக்கெட்டுக்காக 16 ஓவர்களில் 156 ஓட்டங்களைக் குவித்தபோது ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் விரேந்திர சேவாக் 102 பந்துகளில் (17 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் உட்பட) 146 ஓட்டங்களைக் குவித்து வெலகெதரவின் பந்து வீச்சில் டில்சானிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து ரெய்னா களமிறங்க மறுமுனையில் அணித் தலைவர் மகேந்திர சிங் தோனி 53 பந்துகளில் (7 பவுண்டரிகள், 3 சிக்ஸர்

கள் உட்பட) 72 ஓட்டங்களை எடுத்துப் பெர்னாண்டோவின் பந்து வீச்சில் மத்யூசிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய காம்பீர் 11 ஓட்டங்களுடனும் ரெய்னா 16, ஹர்பஜன் சிங் 11 ஓட்டங்களுடனும் பிரகாசிக்கத் தவற இந்திய அணி 43.1 ஓவர்களில் 352 ஓட்டங்களை எடுத்து 6-வது விக்கெட்டையிழந்தது.

இந் நிலையில் இணைந்த ஹோலி-ஜடேஜா ஜோடி சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி அணியைச் சரிவிலிருந்து மீட்டது.

எனினும் ஹோலி 19 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 27 ஓட்டங்களை எடுத்து வெலகெதரவின் பந்து வீச்சில் நேரடியாக போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

இந் நிலையில் 8-வது விக்கெட்டுக்காக இணைந்த ஜடேஜா-பிரவீன்குமார் ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்க இந்திய அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களையிழந்து 414 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் ரவீந்திர ஜடேஜா 17 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 2 சிக்ஸர்கள் உட்பட) 30 ஓட்டங்களையும் பிரவீன் குமார் 5 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்து வீச்சில் குலசேகர, வெலகெதர மற்றும் பெர்னாண்டோ ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் மத்யூஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

**பலமான ஆரம்பம்**

பதிலுக்கு 50 ஓவர்களில் 415 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு தரங்க-டில்சான் ஜோடி பலமான ஆரம்பத்தை வழங்கியது.

இந்த ஜோடியின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் இலங்கை அணி 12 ஓவர்களில் 100 ஓட்டங்களைக் கடந்தது.

இதில் டில்சான் 38 பந்துகளில் அரைச் சதத்தைப் பூர்த்தி செய்து அசத்தினார். இந்த ஜோடி 19.2 ஓவர்களில் 150 ஓட்டங்களைத் தொட திலகரட்ண டில்சான் 78 பந்துகளில் தனது 4-வது ஒரு நாள் சதத்தைப் பூர்த்தி செய்தார்.

மறுமுனையில் தரங்க 51-வது பந்தில் அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார். இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 24 ஓவர்களில் 188 ஓட்டங்களை எடுத்தபோது உப்புல் தரங்க 60 பந்துகளில் (3 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் உட்பட) 67 ஓட்டங்களை எடுத்து ரெய்னாவின் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் தோனியினால் ஸ்ரொம் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய அணித் தலைவர் சங்கக்கார ரன் மழை பொழிய இலங்கை அணியின் ஓட்ட வேகம் அதிகரித்தது.

இதில் சங்கக்கார 24 பந்துகளில் அரைச் சதத்தைப் பூர்த்தி

செய்ய இலங்கை அணி 35.3 ஓவர்களில் 300 ஓட்டங்களைத் தொட்டது.

மறுமுனையில் திலகரட்ண டில்சான் 118 பந்துகளில் 150 ஓட்டங்களைக் கடந்தார். இந்த ஜோடி 2-வது விக்கெட்டுக்காக 12.3 ஓவர்களில் 128 ஓட்டங்களை இணைப்பாட்டமாகக் குவித்தபோது அணித் தலைவர் குமார் சங்கக்கார 43 பந்துகளில் (10 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் அடங்கலாக) 90 ஓட்டங்களுடன் பிரவீன்குமாரின் பந்து வீச்சில் ஜடேஜாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய சனத் ஜெயசூரிய 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். தொடர்ந்து மஹேல ஜெயவர்த்தன களமிறங்க மறுமுனையில் நம்பிக்கையுடன் துடுப்பெடுத்தாடிய திலகரட்ண டில்சான் 124 பந்துகளில் (20 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உட்பட) 160 ஓட்டங்களைக் குவித்துக் ஹர்பஜன் சிங்கின் பந்து வீச்சில் நேரடியாகப் போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

அடுத்து கண்டாம்பி களம் இறங்க மறுமுனையில் மஹேல ஜெயவர்த்தன 3 ஓட்டங்களுடன் ரன் அவுட் முறையில் ஆட்டமிழக்க இலங்கை அணி 40.2 ஓவர்களில் 345 ஓட்டங்களை எடுத்து 5-வது விக்கெட்டையுமிழந்தது.

இந் நிலையில் 6-வது விக்கெட்டுக்காக இணைந்த கண்டாம்பி-மத்யூஸ் ஜோடி ஓரளவு நம்பிக்கையளிக்க இலங்கை அணி வெற்றி இலக்கை அண்மித்தது.

இதில் கண்டாம்பி 24 ஓட்டங்களுடன் ரன் அவுட் முறையில் ஆட்டமிழக்க இலங்கை அணி 48.2 ஓவர்களில் 401 ஓட்டங்களை எடுத்து 6-வது விக்கெட்டையிழந்தது.

அடுத்து வந்த சமரவீர பூச்சியத்துடன் ரன்அவுட் முறையில் ஆட்டமிழந்து ஏமாற்ற இலங்கை அணி 7-வது விக்கெட்டைப் பறிகொடுத்தது.

இந்நிலையில் நெகரா வீசிய இறுதி ஓவரில் 11 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் முதலாவது பந்தில் குலசேகர ஒரு ஓட்டத்தை எடுத்தார்.

அடுத்த 2 பந்துகளில் 2 ஓட்டங்களை எடுத்த மத்யூஸ் 4-வது பந்தில் டெண்டுல்கரிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதி இரு பந்துகளிலும் குலசேகர, வெலகெதர ஆகியோர் தலா ஒரு ஓட்டத்தை எடுக்க இலங்கை அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களையிழந்து 411 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் மத்யூஸ் 33 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 38 ஓட்டங்களை எடுத்தார்.

பந்து வீச்சில் ஹர்பஜன் சிங் 2 விக்கெட்டுக்களையும் பிரவீன் குமார், சகீர்கான், ரெய்னா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக இந்திய அணியின் விரேந்திர சேவாக் தெரிவானார். இவ் வெற்றியின் மூலம் இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இரு அணிகளுக்குமிடையிலான 2-வது ஒரு நாள் போட்டி நாளை மறுதினம் நாக்பூரில் நடைபெறுகின்றது.

**இந்தியா சாதனை**

இப் போட்டியில் 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களையிழந்து 414 ஓட்டங்களை எடுத்தமை ஒரு நாள் சர்வதேச போட்டி அரங்கில் இந்திய அணி பெற்ற அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாகும்.

இதற்கு முன்பு இந்திய அணி போர்முடா அணியுடன் ஒரு நாள் போட்டியில் 50 ஓவர்களில் 413 ஓட்டங்களை எடுத்தமையே சிறந்த ஓட்ட எண்ணிக்கையாக இருந்தது.

இதேவேளை சர்வதேச ஒரு நாள் போட்டி அரங்கில் அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையைப் பெற்ற அணியாக இலங்கை (நெதர்லாந்து அணிக்கெதிராக 50 ஓவர்களில் 443 ஓட்டங்கள்) உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்கு நேற்று பஸ்சேவை ஆரம்பமானது. இந் நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரச அதிபர் க.கணேஷ், யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி ஆகியோர் இணைந்து நகுலேஸ்வரர் ஆலயத்துக்கான பாதையைத் திறந்து வைப்பதையும்,

அமைச்சர் உட்பட அதிகாரிகள் வழிபாட்டில் ஈடுபடுவதையும் நகுலேஸ்வரப் பெருமானுக்கு பூஜை இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.

## மட்டக்களப்பில்...

களிலும் பொது இடங்களிலும் தங்கி இருப்பதாகவும் தெரிவிக்கப்படு கின்றது.

கடந்த 5 நாட்களாக இம் மாவட்டத்தில் தொடர்ந்தும் பெய்து வரும் கடும் மழை காரணமாக குறிப்பிட்ட குடும்பங்களின் இயல்பு நிலையும் பாதிக்கப்பட்டுள்ளது.

வீதிகளிலும் ரயில் பாதைகளிலும் வெள்ள நீர் பாய்ந்து தோடுவதால் போக்குவரத்து சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வெள்ளத்தால் பாதிக்கப் பட்டுள்ளவர்களுக்கான நிவாரண உதவி களை துரிதப்படுத்துமாறு நேற்று மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அதி காரிகளிற்கு தான் உத்தரவிட்டுள்ளதாக அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் எஸ்.எச்.அமீர் அலி கூறியுள்ளார். (ச-3,5)

## சுகாதார தொழிலாளியாக கடமையாற்றியோர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

வவுனியா நலன்புரி முகாம்களில் ஒப் பந்த அடிப்படையில் சுகாதார தொழிலாளி யாக கடமையாற்றிய காலத்திற்குரிய வேத னம் பெற்றுக்கொள்ளாத தற்போது யாழ். மாவட் டத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ள தற் காலிக ஊழியர்களை யாழ்ப்பாண பிராந் திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலு வல கத்துடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணை யாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் கேட்டுக் கொள்கின்றார். (ச-6)

## வட்டுக்கோட்டை தீர்மானத்தை ஆதரித்து தமிழகத்திலும் பொதுவாக்கெடுப்பு!

(சென்னை)

வட்டுக்கோட்டைத்தீர்மானத்தை விடுதலைச் சிறுத்தைகள் முழுமையாக வரவேற்று ஆத ரிக்கின்றது.

அத்துடன் தமிழகத்திலும் அத்தகைய பொது வாக்கெடுப்பு நடத்துவது தொடர்பாக விடுதலைச் சிறுத்தைகள் முன்முயற்சிகளை மேற்கொள்ளும் என அக்கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகில் பரந்து வாழுகின்ற புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்கள் தந்தை செல்வா, காலத்தில் நிறை வேற்றப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மா னத்தை ஆதரிக்கும் வகையில் இன்றைய புலம் பெயர்ந்த தமிழர்களின் மன நிலையை அறியும் பொருட்டும் பொது வாக்கெடுப்பு நடந்து வருகின்றது.

அண்மையில் நோர்வே மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் நடை பெற்ற வாக்கெடுப் பில் பல்லாயிரக்கணக்கான. மக்கள் பங் கேற்று வாக்களித்துள்ள னர்.

நோர்வேயில் 98 விழுக்காடு மற்றும் பிரான்ஸில் 99 விழுக்காடு அளவிலும் பொது மக்கள் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்துள்ளனர்.

அதாவது ஈழத்தமிழர்களுக்கு நிலை யான பாதுகாப்பு தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டுமே என்பதை மீண்டும் மக்கள் இத்தகைய வாக்கெடுப்பின் மூலம் மறு உறுதி செய்துள்ள னர்.ஈழச் சிக்கல்களுக்கு ஒரே தீர்வு-இறுதித் தீர்வு தமிழர்களின் இறை யாண்மையினை பாதுகாப்பதற்கான தமிழீழ விடுதலை மட்டுமே.

இத்தனை இழப்பிலும் ஈழ மக்கள் சோர் வடையாமல், சலிப்படையாமல் தமிழீழத்தை வென்றெடுக்க வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக உள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள சூழலில் புலம் பெயர்ந்த தமிழ்மக்கள் தங் களுக்குள் வாக்கெடுப்பு நடத்தி தமது ஒற்று மையை வெளிப்படுத்தியிருப்பது மிகுந்த ஆறுதலை அளிக்கிறது என்றார். (ச-5)

## வடக்கில் இடி...

முழக்கத்துடன் கூடிய மழையின் போது தற் காலிகமான ஒப்பிட்டளவில் கடுமையான காற்று ஓரிடத்திலேயே சுழன்று வீசும்.

பொதுமக்கள் மின்னலினால் ஏற்படும் பாதிப் புக்களினை குறைப்பதற்கான போது மான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர் என அவரின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச)

## சனல்-4 தொலைக்காட்சியில்...

பெரடறிக் என்ற வீடி யோக்காட்சிகளின் நம் பகத்தன்மை குறித்து ஆய்வுகளை மேற் கொள்ளும் ஒருவர் மூலமாகவே இந்த விசார ணை நடத்தப்பட்டுள்ளது.

எப்.பி.ஐ. எனப்படும் அமெரிக்கப் புல னாய்வுப் பிரிவின் பயிற்சிக் கல்லூரி விரி வுரையாளராக கடமையாற்றி வரும் கிரான் குறிப்பிட்ட வீடியோக்களில் மோசடிகள் இடம் பெற்றி ருக்கவில்லை என்று உறுதிப்படுத்தி யுள்ளார்.

அதில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டதா கவோ வேறுவிடயங்கள் பொருத்தப்பட்டுள்ள தாகவோ கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் ஆதா ரம் அற்றவை என்றும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

அதேவேளை இந்தக்காட்சிகளை திட்டம் மிட்ட முறையில் நடிகர்கள் மூலமாக படம் பிடித்திருக்க முடியாது என்றும் துப்பாக்கிக் குண்டு துளைத்தவுடன் தலையிலிருந்து வெளியேறும் குருதி மற்றும் கூடுபட்டவர்கள் விழும் முறைபோன்றவை இயற்கையானவை என்றும் வீடியோ மாற்றங்கள் மற்றும் ஒளிக் கலவைகளை இன்றி அவற்றை நிஜமானவை போன்று ஒரு போதும் படமாக்க முடியாது என்று அவர்குறிப்பிட்டுள்ளார்.

நிஜமாக ஒருவர் சுடப்பட்டு இறக்கும் போது ஏற்படும் அசைவுகளை நடிப்பில் வெளிப்படுத் தவே முடியாது என்றும் அவர் சுட்டிக் காட்டி யுள்ளார். இந்தக்காட்சியானது நொக் கியா கைத்தொலைபேசி மூலமாகவே படமாக்கப் பட்டுள்ளதாகவும் அதில் எந்தவித மான மாற் றங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்க வில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக அந்த வீடியோ 100 சத வீதம் உண்மையானது என்றும் இடம் பெற்ற மனிதப் படுகொலைகள் மாற்றுக்கருத்துக் கள் இன்றி நிஜமாகவே இடம்பெற்றிருப் பதை அவர் உறுதிப்படுத்தியுள்ளதாக ரைம்ஸ் சஞ்சிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ரைம்ஸ் சஞ்சிகையினர் இந்த உறுதிப் படுத்தலானது அரசாங்கத்தின் யுத்தக்குற்றங் கள் தொடர்பிலான விசாரணைகளுக்கான சர்வதேசத்தின் குரலை மேலும் வலுப்படுத் தும் என்று அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ள னர். (ச-5)

## மினிவான் தடம் புரண்டதில்...

யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த குறித்த மினிவான் சிறுப்பிட்டிப் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து தடம் புரண்டு சுமார் 50 மீற்றர் தூரத்திற்கு இழுத்துச் சென்று விபத் துக்குள்ளானது.

இச்சம்பவத்தின் போது மினிவான் நடத் துநரான பாரதி வீதி பத்தமேனி அச்சுவேலி யைச் சேர்ந்த சரவணமுத்து ரவீந்திரன் (வயது 28) என்பவர் தலை நசியுண்டு ஸ்தலத்தி லேயே உயிரிழந்தார்.

இதேவேளை கே.பிரபாகரன் (வயது 30), கே.பாலசுப்பிரமணியம் (வயது 51), எஸ்.சசிக் குமார் (வயது 30), எஸ்.மிராஜ் (வயது 20), எஸ்.ஜோதிகா (வயது 20) ஆகியோர் படுகாய மடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை களை மேற்கொண்ட அச்சுவேலி பொலிஸார் பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். (ச-7)

## சரத் பொன்சேகா கருத்துக்...

படுத்துவதற்காக பல்வேறு பட்ட முயற்சிகள் அரசால் மேற்கொள்ளப் பட்டுவந்தன. ஆனால் சரத் பொன்சேகாவின் ஒரேயொரு பேட்டி யால் இந்த முயற்சிகளின் பலன்கள் யாவும் கேள்விக்குறியாகியுள்ளன என்று வருத்தம் தெரிவித்துள்ளார் யாப்பா.

இதேவேளை ஜெனரல் சரத் பொன்சேகா தனது கருத்தைத் திருத்திக் கொள்ளுமாறு எவ்வித கோரிக்கைகளையும் விடுக்கவில் லையெனவும் தமது கருத்து திரிபுபடுத்தப்பட் டுள்ளதாக தமக்கு அறிவிக்கவில்லை என வும் சண்டேலீடர் ஊடகவியலாளர் பெட்ரிக்கா ஜென்ஸ் தெரிவித்துள்ளார்.சரத் பொன்சேகா தெரிவித்த கருத்தை தான் எவ்வித மாற்றங் களும் செய்யாது அவ்வாறே வெளியிட்டதா கவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## ஜனாதிபதித் தேர்தலில் போட்டி...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் எதிர்வரும் ஜனவரி 26ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப் பணத்தை செலுத் தியுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் எடுத்துள்ள முடிபானது அவ ரது தனிப்பட்ட முடிபேயன்றி தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் தொடர்புடையது அல்ல என அக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரிய நேத்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் தேசிய கூட் டமைப்பு போட்டியிடுவதில்லை என ஏற்கனவே தீர்மானித்துள்ள போதிலும் அக்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரான எம். கே.சிவாஜிலிங்கம் (ரெலோ) சுயேட்சையாகப் போட்டியிட தீர்மானித்து நேற்று தேர்தல் செயலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியுள் ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் மாறுபட்ட கருத் துக்கள் தோன்றியுள்ள நிலையில் அவர் இந்த முடிபை எடுத்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜி லிங்கம் எடுத்துள்ள இந்த முடிபானது அவ ரது தனிப்பட்ட முடிபேயன்றி தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் தொடர்புடையது அல்ல என அக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரிய நேத்திரன் தெரிவித்தார்.

ஏற்கனவே இதற்கு முன்னோடியாக ரெலோ அமைப்பில் மத்திய குழு உறுப்பினர் பதவி உட்பட தான் வகித்து வந்த முக்கிய பதவிகளிலிருந்து விலகிக் கொள்வதாக அக் கட்சிக்கு நேற்று சிவாஜிலிங்கம் அறிவித் துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இது தொடர்பாக தமிழ் தேசி யக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோ அமைப்பின் செயலாளர் நாயகம் பிரசன்னா இந்திரகுமாரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது இது தொடர்பாக இன்று தமது கட்சி கூடி ஆராயவிருப்பதாக பதிலளித்தார். (ச-5)

## வெளிமாவட்டங்களுக்குச்...

சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங் குள்ள நிலைமைகளை நேரில் கண்டறிந்தார்.

நேற்று எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பிர காரம்; கிளிநொச்சி செல்லும் அரச ஊழியர் கள் காலை 6.00 மணிக்கு யாழ். சிங்கள மகா வித்தியாலய மைதானத்திற்கு வருகைதர வேண் டும். இவர்கள் பயணஞ் செய்யும் பேருந்துகள் காலை 7.00 மணிக்கு அங்கிருந்து புறப் படும்.

இதேநேரம் சாவகச்சேரி மற்றும் கொடி காமம் பகுதிகளில் இருந்து கிளிநொச்சி செல் லும் அரச ஊழியர்களை அப்பகுதிகளில் வைத்து பேருந்துகளில் ஏற்றிச் செல்வதற் கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட் டுள்ளன.

இலங்கை போக்குவரத்து சபைக்குரிய பேருந்துகளில் கொழும்பு செல்லும் பயணி கள் காலை 6.00 மணிக்கு யாழ். பிரதான பஸ் தரிப்பு நிலையத்திற்கு வருகைதர வேண்டும். பின்னர் 7.00 மணிக்கு இப்பயணிகள் சிங்கள மகாவித்தியாலயமைதானத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு சோதனைக் கடமைகள் முடி புற்றதன் பின்னர் இவர்களை ஏற்றிச் செல்லும் பேருந்துகள் காலை 8.30க்கும் 9.00 மணிக் கும் இடையில் கொழும்பு நோக்கிப் புறப்படும்.

அதேநேரம் தனியார் பேருந்துகளில் கொழும்பு செல்லும் பயணிகள் காலை 6.30 மணிக்கு நேரே சிங்கள மகாவித்தியாலய மைதானத்திற்கு வருகை தர வேண்டும். இப் பயணிகளும் 8.30க்கும் 9.00 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் புறப்படும் முதலாவது கொன்வேயில் கொழும்பு நோக்கிப்புறப்பட இயலும்.

இதனிடையே வவுனியா செல்லும் பயணி கள் காலை 6.00 மணிக்கு யாழ். புகையிரத நிலையக் கட்டிடத்திற்கு வருகை தர வேண்டும். இப்பயணிகள் அங்கிருந்து நேரே வவுனியா செல்வதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற் கொள்ளப்பட்டு வருவதால் அவ்வேற்பாடுகள் நிறைவுறும் வரையில் தற்பொழுது நடை முறையில் இருக்கும் முறைமை சிலநாட் களுக்கு நீடிக்கும்.

இரண்டாவது கொன்வே காலை 10.30 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்ப டும் என அமைச்சரின் அலுவலகம் வெளியிட் டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள் ளது. (ச)

## சரணடைவதற்கு மத்தியஸ்தம்...

கொண்டதாக மனிதாபிமான விவகாரங் களுக்கான பிரதிநிதி ஜோன் ஹோம்ஸ் சீ.என். என். தொலைக்காட்சி சேவைக்கு அளித்த நேர் காணலில் சுட்டிக்காட்டியுள் ளார்.

சரணடையும் செயற்பாடுகளை கண் காணிப்பு செய்ய ஐக்கிய நாடுகள் ஒப்புக் கொண்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் யுத் தம் இறுதிக் கட்டத் தை அடைந் திரு ந்தகாரணத்தினால் குறித்த பிர தேசத் திற்கு செல்வதற் கோ அல்லது நடவ டிக்கைகளை கண் காணிப்பதற்கோ போதியளவு கால அவகாசம் கிடைக் கப் பெறவில்லை.

சரணடைவதற் கான தமது விருப் பத்தினைபுலிகளின் சிரேஷ்ட உறுப்பின ர்கள் ஐக்கிய நாடு கள் அமைப்பிடம் வெளிப்படுத்தியிருந் ததாக அவர் குறிப் பிட்டுள்ளார்.

இறுதிக் கட்டயுத் தத்தின் போது பல தமிழீழ விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப் பினர்கள் கொல் லப்பட்டதா கத் தெரிவிக்கப் படுகிறது. எனினும் தமி ழீழ விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப் பினர்கள் எவரும் சரணடைய எத்தனிக் கவில்லை எனவும் சரணடைய முயற்சித்த தாக வெளியாகும் தகவல்களில் உண்மை யில்லை எனவும் இலங்கை அரசாங்கம் அறி வித்துள்ளது. (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.